விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 09 செவ்வாய்க்கிழமை (24.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# யுத்தத்தின் பின் வடக்கு கிழக்கில்

# ஆயுதக் குழுக்கள் எதுவும் இல்லை!

## பாதுகாப்பு செயலர் விளக்கம்

*(கொழும்பு),* வடக்குக் கிழக்கில் பாதுகாப்புத் தரப்பு தவிர்ந்த வேறெந்த ஆயுதக் குழுக்களும் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதான உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.




(20ஆம் பக்கம் பார்க்க)

## 17 ஆயிரம் பேர் பொலிஸாரால் கைது

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருந்த 17 ஆயிரத்து 595 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோகண தெரிவித்தார்.

கடந்த யூன் மாதம் 20ஆம் திகதி முதல் இம்மாதம் 20ஆம் திகதி வரையான ஒரு மாத காலப் பகுதியில் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத் திரு விழா இன்று இடம்பெறவுள்ளது. இன்று காலை 8 மணிக்கு பூசைகள் இடம்பெற்று 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். (எ)

## மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

## வெளிநோயாளர் பிரிவு இயங்காது

### யாழ்.மருத்துவர் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இன்று இடம்பெற உள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை யின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் தனி யார் வைத்திய நிலையங்களிலும் சிகிச்சை கள் இடம்பெறமாட்டாது என யாழ். மருத்து வர் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியர்களின் பிரச்சினை தொடர் பாக உரிய தீர்வு சுகாதார அமைச்சிடம் இரு ந்து இதுவரை கிடைக்கப்பெறாமையினா லேயே இப்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வுள்ளதாக மருத்துவர் சங்கம் தெரிவித்து ள்ளது.

இப் பணிப்புறக்கணிப்பின்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அவசிய சிகிச்சைப் பிரிவுகள் இயங்குவதோடு ஏனைய சிகிச்சைகளோ வெளிநோயாளர் பிரிவு களோ இயங்கமாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## நிமலரூபனின் இறுதிக்கிரியை இன்று

(வவுனியா)

அரசியல் கைதி நிமலரூபனின் சடலம் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நேற்று மாலை 5 மணியளவில் பெற்றோரிடம் ஒப் படைக்கப்பட்டது.

சடலத்தைப் பொறுப்பேற்ற பெற்றோர் மனித உரிமை இல்லத்தின் உதவியுடன் வவுனியாவிற்கு கொண்டு செல்லவுள்ள துடன் இன்று இறுதிக்கிரியைகளை மேற் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா சிறைச்சாலைப் போராட்டத் தைத் தொடர்ந்து அனுராதபுரம் சிறைக்கும் அதன்பின்னர் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்யாவிடமிருந்து 14 ஹெலிகளை கொள்வனவு செய்கிறது அரசு!

(கொழும்பு)

எம்.ஐ.-171 ரக 14 ஹெலிகொப்டர்களை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், இதற்கான கொள்வனவுக் கட்டளை இம்மாத நடுப்பகுதியில் ரஷ்யாவின் ரொசோபொரன் எக்ஸ்போ கம்பனியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என அக்கம்பனி அறிவித்துள்ளது.

10 வருட கடன் அடிப்படையில் 30 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் இந்தக் ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உல்லாசப் பயணத்துறைக்காக இந்த ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப் படவுள்ளதாக விமானப் படையின் பேச்சாளர் அன்ரூ விஜேசூரிய, ரொய்டர்ஸ் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப் படை ஹெலிடுவர்ஸ் என்ற பெயரில் உல்லாசப் பயணச் சேவை யை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (எ-11)

## ஜே.வி.பியின் ஏற்பாட்டில்

## நல்லிணக்கத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்



(கிளிநொச்சி)

இன நல்லிணக்கத்தை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் நேற்றுத் திங்கட்கிழமை ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

1983ஆம் ஆண்டு யூலைப் படுகொலையின் நினைவுநாளானயூலை23ஆம் திகதியான நேற்று இன நல்லிணக்கத்தையும் தேசிய ஒற்றுமையையும் கட்டியெழுப்புவ தற்கு ஒன்று திரள்வோம் என்ற அறிவிப்புடன் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் இளை ஞர் அணியான சோசலிச இளைஞர் சங்க மும் தென்பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு வருகைதந்த மக்கள் விடுதலை முன்னணி யின் உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் கிளிநொச்சிக் கிளையின ருமாக சுமார் 200 பேர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மக்கள் விரோத அரசைத் தோற்கடிப் போம்,வடக்கிலே சிவில் நிர்வாகத்தை இயங்க விடு, அரசியல் கைதிகளை விடுதலை செய் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங் களுடன் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தை முழுமையாக நடத் துவதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் ஆயுதம் மீட்பு

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியிலு ள்ள பாழடைந்த வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த ஆயுதங்களை மானிப்பாய்ப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த வீட்டிற்குச் சென்ற அவர்கள் அங்கு மறைத்து வைக்கப்பட்டி ருந்த சுமார் 500 துப்பாக்கி ரவைகள் உள் ளிட்ட ஆயுதங்களை மீட்டுள்ளனர் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மானிப்பாய் பகுதியில் கடந்த வருடமும் இவ்வாறு ஆயுதங்கள் மீட்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (எ-6)

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி; வாழ்க்கைச் செலவில் தாக்கம்

ரூபாயின் வீழ்ச்சி வாழ்க்கைச் செலவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நாணய நிதியத்தின் இலங்கைக்கான விதிவிடப் பிரதி நிதி கோஷி மாத்தாய் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பின்போதே இதனைத் தெரி வித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை நீண்ட கால இலக்குகளை அடைந்து கொள்வதற்காக இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத் திற்கும் இடையே புதிய கடன் செயல்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வருமானத்தை உயர்த்துதல், தேசிய தொழில்மேம்பாடு, வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையினைக் கட்டுப்படுத் தல் மற்றும் பணவீக்கத்தை நிவர்த்தி செய்தல் போன்றவற்றை இந்த செயல்திட்டத்தின் மூலம் தீர்க்க முடியும் என நம்பிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங் கைக்கு வழங்கப்பட்டு வரும் 260 கோடி அமெரிக்க டொலர் கடனுதவியின் ஒரு கட்ட மாகவே இந்த புதிய சுவட்டு ஒத்துழைப்பு அமைந் துள்ளதாக நாணய நிதியத்தின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி கோஷி மாத்தாய் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# "நீதிக்கு நீதி கிடைக்கவேண்டும் அதுவரை தொடர் போராட்டம்"

## சட்டத்தரணிகள் அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நீதிமன்றம் தாக்கப்பட்டிருக்கின்றமை மிகவும் கவலைக்கிடமானது. இது வன்மையாகக் கண்டிக்கப்படவும் வேண்டியது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் போராட்டம் தொடர்கதையாகவே இருக்கும் என்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் இ. கயஸ்பல்டானோ தெரிவித்துள்ளார்.

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் இதுவரையில் இடம்பெற்றிராத அநாகரிக செயல் எனவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்துறையில் ஏறத்தாழ 48 வருடங்களாக பணியாற்றிவரும் சட்டத்தரணி இ. கயஸ்பல்டானோ மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் இலங்கை வரலாற்றில் மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டதைப் போன்ற சம்பவங்களை நான் பார்த்ததுமில்லை கேள்விப்பட்டதும் இல்லை. மன்னார் மாவட்டத்தில் நீதிமன்றம் தாக்கப்பட்டிருக்கின்றமை மிகவும் கவலைக்கிடமானது. இது வன்மையாகக் கண்டிக்கப்படவும் வேண்டியது. ஏனெனில் நீதிமன்றத்தில் தான் மக்களுக்கு நீதி கிடைக்கின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் நீதிமன்றங்கள்தான்.

அப்படிப்பட்ட நீதிமன்றங்களே தாக்கப்படுவதாக இருந்தால் பொதுமக்களின் சுதந்திரமும் பாதிக்கப்படுவதாகவே அமையும். மக்கள் நீதிமன்றங்களை அவமதிப்பதாக இருந்தால் அது தங்களது கையாலேயே தங்கள் கண்ணைக் குத்துவது போன்றது என்று தான் சொல்லவேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்பில் ஏதும் பரிகாரம் வேண்டும் என்றால் அதற்கான முறையிருக்கின்றது. அவ்வாறான சூழ்நிலையில் மேல் முறையீடு செய்வது அல்லது மீளாய்வு செய்வது ஒன்றுதான் சட்டத்தால் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிவாரணமாக இருக்கின்றது.'

அவ்வாறான சட்டரீதியான நிவாரணத்தை இவர்கள் மேற்கொள்ளாமல் வன்செயலில் ஈடுபடுவது காட்டுமிராண்டித்தனத்திற்கே கொண்டு செல்கின்றது. இப்படிப்பட்ட விடயங்கள் தவிர்க்கப்படவேண்டும். இது தவிர நீதிவானைத் தனிப்பட்ட ரீதியில் தூசித்தமையும் யாரும் மன்னிக்க முடியாத ஒரு காரியமாகவே அமைகின்றது.

எனவே இவற்றைக் கண்டித்து எதிர் காலத்திலே எமது நீதித்துறைக்கு எதிராக இது போன்ற சம்பவங்கள் இலங்கையில் நடக்கக் கூடாது என்ற நோக்கோடு இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையிலே உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களினால் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உயரதிகாரிகள் அசமந்தப் போக்கின் காரணமாகத்தான் இப்படியானதொரு துர்ப்பாக்கிய நிலை நடந்தேறியிருக்கிறது.

சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகளுக்கு அவர்களுடைய கடமையை உணர வைக்கும் வரையிலும் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் வரையிலும் நீதிக்கு நீதி கிடைக்கும் வரையிலும் எமது இந்தப் போராட்டம் தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

### இளம் பெண் கொலைக் குற்றச்சாட்டு

## தேடப்பட்டு வந்த சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவரை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை நேற்று மாலை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி மகிந்த வைத்திய திலக தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இளம் பெண்ணொருவரை குறித்த நபர் கழுத்தை நெரித்து கொலை செய்திருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வளவு காலமும் தலைமறைவாகியிருந்த குறித்த நபரை கந்தர்மடப் பகுதியில் வைத்து தனது தலைமையிலான பொலிஸ் குழு கைது செய்ததாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு கடந்த 11 வருடங்களாக பொலிஸாரை ஏமாற்றி வந்த கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபர் ஒருவரையும் நேற்று முன்தினம் வசாவிளான் பகுதியில் வைத்து கைது செய்ததாகவும் மது போதையில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்திய 13 பேரை நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸார் கைது செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்ற கர்ப்பிணிப் பெண்ணுக்கு சுகவீனம்

(கொழும்பு)

இலங்கை அகதிகள் 141 பேருடன் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்த படகிலிருந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர், சுகவீனம் காரணமாக அவுஸ்திரேலிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் உள்ள மருத்துவமனையிலேயே குறித்த கர்ப்பிணிப் பெண் சிகிச்சை பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

141 அகதி அந்தஸ்து கோருவோரை ஏற்றிச் சென்ற படகு, கிறிஸ்மஸ் தீவுக்கு 185 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து அவுஸ்திரே லிய சுங்கத்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட அகதிகள் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிச் சென்றவர்களில் அதிகமானோர் இலங்கையர்கள் எனவும் சிலர் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## "ரட்டவிருவோ" அமைப்பு உருவாக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் உன்னத காரியத்தில் ஈடுபட்டுள்ள, வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும் அவர்களது குடும்ப நலப் பணிகளுக்காகவும், அக்குடும்பங்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையை கருத்தில் கொண்டு இலங்கை வெளிநாட்டு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேராவின் ஆலோசனைக்கமைய பிரதேச செயலகப் பிரிவு மற்றும் தேசிய மட்டம் வரை விரிவுபடுத்தப்பட்ட அமைப்பொன்றை உருவாக்குவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக தெளிவுபடுத்தும் கருத்தரங்கானது மாவட்ட ரீதியாக மாவட்ட செயலகங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் ரட்ட விருவோ அமைப்பை உருவாக்குதல் நிகழ்வொன்றை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா வருகை தரவுள்ளதாக இப்பணியக அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (அ-2)

## மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காக நாளை புதன்கிழமை மற்றும் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

## மோ.சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் வேகமாக நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஆசிரியை ஒருவரும் ஒரு இளைஞரும் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆசிரியை பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டு இருக்கும் போது குறித்த இளைஞரும் தனது வேலை நிமித்தம் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இந்நிலையில் இரு மோட்டார் சைக்கிள்களும் மோதியுள்ளன.

இதில் படுகாயமடைந்த இருவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ரங்கநாதன் மயூரன் (வயது 25) என்ற இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பரீட்சையைப் பிற்போடல்

25.07.2012 அன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவிருந்த முழு நேர உப விடுதிக் காப்பாளர், தரம் II பதவிக்கான பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கு அழைக்கப்பட்ட சகல பரீட்சார்த்திகளும் இதனை கருத்தில் கொள்ளவும்.

பதிவாளர்
2012.07.24

(C-593)

## சேவை நலன் பாராட்டு

திருமதி சாந்தரூபினி ஞானச்சந்திரன்
(பயிற்றப்பட்ட கிறிஸ்தவம்) S.L.T.S 2-1
அ.இ. சமாதான நீதவான்



சேவைக்காலம்: 1990.03.29 - 2012.05.10

ஆசிரியர் சேவையில்
ஆரம்பக்கல்வி ஆசிரியராக
22 வருடங்கள் சிறப்புடன்
சேவையாற்றி 10.05.2012
அன்று ஓய்வு பெற்ற
திருமதி சாந்தரூபினி ஞானச்சந்திரன்
அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில்
சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு
காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
அல்வாய் கிழக்கு, அல்வாய்

(C-595)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2011 வரையும் (மீட்புக் காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 31.01.2012 வரையும் (மீட்புக் காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் - 2012.09.15 (சனிக்கிழமை) மு.ப. 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி<br>மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| நெல்லியடி | ---- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி<br>கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
2012.07.20

(C-594)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை என்பது...!

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். ஒருநாள் அவரைத் தேடி ஒருவர் வந்தார்.

"ஐயா!... நான் கடவுளை பரிபூரணமாக நம்புகிறேன்" என்றார்.

"சரி... அந்த நம்பிக்கை உனக்கு எப்படி வந்தது?" என்றார்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

"ஐயா எனக்குத் திருணம் முடிந்து இற்றைக்கு 10 வருடங்கள் ஆகிவிட்டது... ஆனால், குழந்தைப் பாக்கியம் இல்லை. அதற்கான காரணம் தொடர்பாக யோசித்துக் கொண்டிருக்கும் போது, எனது நண்பர் வந்தார். அப்போது அவர் சொன்னார்; "உனக்கு மதப்பற்று இல்லை... எந்தக் கடவுளையுமே நம்பமாட்டாய்... அதுதான் காரணம்! கடவுளை நம்பு... உனக்கு குழந்தை பாக்கியம் சீக்கிரம் கிடைக்கும் என்றார். அவர் அப்படிச் சொன்னதும் எனக்குச் சந்தேகம்தான்... இருந்தாலும் அவர் சொன்னபடியும் நடந்துதான் பார்ப்போம்- என்று முடிபு செய்தேன்.

கடவுளை எனது வாழ்வில் நம்பினேன். அந்த வருடமே அழகான ஆண் குழந்தையொன்று பிறந்தது... எல்லாம் இறைவன் அருள் என்று நம்பினேன்...

"நீ செல்வதெல்லாம் சரிதான். இருந்தாலும் இந்தக் காலத்திலே எந்தவொரு காரியமாக இருந்தாலும் அதை சோதனை செய்து பார்த்துவிட்டுத்தான் ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

அறிவுபூர்வமான முடிவு அதுவாகத்தான் இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட விடயத்தைப்பற்றி எத்தனை தடவை சோதனை செய்தாலும் ஒரே முடிவுதான் கிடைக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். அதனாலே இப்போது மறுபடியும் ஒரு சோதனை" என்றார்.

"என்ன செய்ய வேண்டும்?"என்று கேட்டார்.

"கடவுளிடம் ஒரு பெண் குழந்தை வேண்டுமென்று கேள். முதலில் ஆண் குழந்தை கொடுத்தது மாதிரி இப்போது ஒரு பெண் குழந்தையைக் கொடுக்கிறாரா பார்க்கலாம்" என்றார். சரி என்று கூறிவிட்டு அதே மாதிரி முயற்சி செய்தார். அதன்பின் அவர் இந்தப் பெரியவரிடம் வரவே இல்லை.

சிறிது காலம் கழித்து இவரே அவரைத் தேடிக் கொண்டுபோய் கதவைத் தட்டினார். அவர் கதவைத் திறந்தார்.

"என்ன நடந்தது... கடவுள் கண் திறந்தாரா?" என்று கேட்டார்.

முதல் தடவை அது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட ஒரு சாதகம். இப்போது நீங்கள் இரண்டாவது தடவை சொன்ன பின்னர் தினமும் கடவுளை வேண்டிக் கொண்டு தான் இருந்தேன். எதுவுமே நடக்கவில்லை. மிகவும் விரக்தியாகச் சொன்னார்.

"ஒரேயொரு தோல்வியிலே உங்கள் நம்பிக்கையெல்லாம் பறந்து போய்விட்டது பார்த்தீர்களா?" என்றார் அந்தப் பெரியவர்.

அனைத்தும் நல்லவிதமாக நடக்கிற வரைக்கும் நம்பிக்கை.

எதிர்பார்த்தது தோல்வியிலே முடிந்தது. அவ நம்பிக்கை!

அடுத்தவர்கள் பேரிலே வைக்கும் நம்பிக்கை எந்த நேரத்திலேயும் விவகாரமாகி விடக்கூடிய சாத்தியம் உண்டு.

நாம் நம்பிக்கை வைக்க வேண்டியது நமது கடவுளிடம் தான். நமக்குள்ளே இருக்கிறார் கடவுள்.

"எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருந்தால் எந்த முட்டாளுக்கும் நம்பிக்கை வரத்தான் செய்யும்!" என்கிறார் ஓஷோ.

"தியானத்தின் மூலமாக உனக்குள் ஆழமாகத் தோண்டினால் உன் அடியாழத்தில் நம்பிக்கை ஊற்றைக் காண்பாய்"என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லை.மாவட்ட செயலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் லோகோ திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்- தமிழ்) பதவிக்கு 6 மாத கால ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 8 பேருக்கும் மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்) 01 இற்கும் வெற்றிடம் உள்ளது.

இதில் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான கல்வித் தகைமையாக க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் அடங்கலாக 03 விஞ்ஞான பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமையுடன் கூடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் இத்துறைக்கு ஏற்புடையதான தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (3 வருட பகுதி நேரப்பயிற்சி பாடநெறி) அல்லது பட வரைவியல் தொடர்பாக ஒரு வருட முழுநேர கால பயிற்சி பாடநெறியை திருப்திகரமாக பூர்த்தி செய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமையாக தொழில்நுட்பம் தொடர்பான தகைமைகள் பெற்றிருத்தல் வேண்டும்.

மொழிபெயர்ப்பாளருக்கான (சிங்களம் - தமிழ்) கல்வித் தகைமையாக க.பொ. த. (சா/த)/ க.பொ.த. (உ/த)/ பட்டதாரி/ மொழித் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

தொழில்சார் தகைமையாக மொழிபெயர்ப்பு அனுபவம் தொடர்பான சான்றிதழ் மொழி பெயர்ப்பு, மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடவும். குறிப்பிட்ட கல்வித் தகைமை உடைய விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 90 | 120 |
| தக்காளி | 140 | 160 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 60 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 140 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 30 | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 80 | 90 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 130 | 80 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | -- | -- |
| பயற்றங்காய் | 120 | 140 | 110 | 60 |
| லீக்ஸ் | 130 | 140 | 100 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 90 | 120 | 90 | 160 |
| முருங்கைக்காய் | 40 | 70 | 120 | 80 |
| போஞ்சி | -- | 120 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 | 50 | -- |
| கீரை – 1 பிடி | 8-15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 60 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 20-22 |

# இராசி பலன்

24.07.2012
(ஆடி 09, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி காலை 6.42 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.47 மணிவரை
உத்தரம் முற்பகல் 11.31 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
சஷ்டி விரதம்,
நல்லூர்க் கந்தன் கொடியேற்றம்.

**மேடம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலம் சீராகும், விருந்து, விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், பகைவர் விலகுவர்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தனரவு திருப்திகரமாக அமையும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சில பொருட்கள் அன்பளிப்பாக வந்து சேரும்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள்,நண்பர்கள் மத்தியில் நல்ல பெயரெடுப்பீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கடகம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், தொழில் வளம் பெருக தொல்லை தந்தவர்களே உதவ முன்வருவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**சிங்கம்** பொருளாதார வளர்ச்சி கூடும் நாள், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரும்,ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கன்னி** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள்,ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், விரும்பிய காரியம் விரும்பியபடியே கை கூடும்.

**துலாம்** தொழிலில் புதிய மாற்றங்கள் உருவாகும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நாணயத்தோடு நடந்து கொள்வதால் அனைவரும் உங்களை பாராட்டுவர்.

**விருச்சிகம்** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,உறவினர் பகை அகலும், மதிப்பும் மரியாதையும் உயரும், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்,பொருளாதார நிலை உயரும்.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள் தன வரவுகள் திருப்திகரமாக அமையும், தொழில் முன்னேற்றமுண்டு,பிறர் உதவியுண்டு.

**மகரம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தேக நலனில் தெளிவு ஏற்படும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கடன் உதவிகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.


**கும்பம்** நண்பர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது,பயணங்களால் பயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்,தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆண்கள், பெண்கள் விடுதிக்கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்படுவதையும் விடுதிக் கட்டடத்தொகுதியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# ஆசிரியர்களின் பங்கீட்டில் ஏற்படும் தாக்கம் கல்விவீழ்ச்சிக்குக் காரணம்

## பேராசிரியர் சண்முகதாஸ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிரியர் பங்கீட்டில் பாரபட்சம் காட்டப்படுவது கல்வி வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக கூற முடியும் என யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்திக் குழுவின் ஏற்பட்டில் வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் கல்வி நிலை தொடர்பாக ஆராயும் நோக்குடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கக்கூடியது.

வடமாகாணத்தில் கல்வி நிலை தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த வேண்டிய தேவையுள்ளது.

என்னைப்பொறுத்தவரை கல்வி நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக ஆசிரியர் பங்கீடு ஒரு காரணம்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை ஒரு வலயத்தில் ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக காணப்படுகின்ற போது இன்னொரு வலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கான காரணத்தினை ஆராய வேண்டும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் வட மாகாணத்தின் கல்வி நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பாக பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்ட வளவாளர்களில் ஒருவரால் ஆங்கில ஆசிரியர்கள் தொடர்பாக ஆய்வுக்கட்டுரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் ஒரு வலயத்தில் 60ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படும் போது 90 ஆங்கில ஆசிரியர்கள் உள்ளதாகவும் இன்னொரு வலயத்தில் 30 ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுமிடத்து 15 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் பங்கீடு கல்விவீழ்ச்சியில் முக்கியத்துவம் செலுத்துகின்றது.

மேலும் ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் தலையீடு, சரிவர ஆராயாமல் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவது.

குறிப்பாக கர்ப்பிணியாகவுள்ள ஆசிரியரை திடீரென கஷ்டப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்வது போன்ற விடயங்களைக் குறிப்பிடமுடியும் என்றார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

ஆசிரிய இடமாற்றத்தின்போது அரசியல் தலையீடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவது இல்லையென உறுதிபடத் தெரிவித்தார்.

அத்தோடு எங்கள் பிரதேசங்களில் கல்விநிலை தற்போது வீழ்ச்சிகண்டுவரும் நிலையில் அதனை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்காகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வடபகுதியில் இடம்பெறும் ஆசிரிய இடமாற்றத்தின்போது எந்தவகையிலும் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது என்பது தொடர்பில் துறைசார்ந்தவர்களிடம் பணிப்புரை வழங்கியுள்ளேன் என்பதுடன் எவ்விதமான முறைகேடுகளுக்கும் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# விருந்தினர் தங்கும் விடுதியொன்றில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சம்பவம் இடம்பெற்றவேளையில் குறித்த விடுதியின் மேல் மாடியில் இரு வெவ்வேறு அறைகளில் தென்பகுதியைச் சேர்ந்தவர்களும் மற்றொரு அறையில் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் தங்கியிருந்துள்ளனர்.

மூவரினதும் அறையின் ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது.

விடுதிக்குப் பாதுகாவலர் இருந்துள்ள போதிலும் அவர் விடுதிக்கு முன்பாக இருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் திருட்டுத் தொடர்பாக விடுதி உரிமையாளருக்கு தெரியாதபோதிலும் நேற்றுக்காலையே விருந்தினர்களால் குறித்த திருட்டுத் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து விடுதி முகாமையாளரினால் நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

# வேதாரணியத்தில் கரையொதுங்கிய படகு பருத்தித்துறை முனைப்பகுதிக்குரியது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் வேதாரணியம் கடற்பகுதியில் அண்மையில் கரையொதுங்கிய படகு பருத்தித்துறையைச் சேர்ந்த மீனவரொருவருடையது என இனங்காணப்பட்டு உள்ளதாக யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

குறித்த படகானது கடந்த மாதம் அளவில் மர்மமான முறையில் இந்தியாவின் வேதாரணிய கடற்பகுதியில் கரையொதுங்கியது.

இதில் எவ்வித மீன்பிடி உபரணங்களும் காணப்படாததால் இந்திய சுங்க அதிகாரிகளால் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இப்படகு இலங்கையின் வடக்குப்பகுதி பதிவிலக்கத்தினை கொண்டிருந்தமையால் யாழ் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்திடமும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி குறித்த படகானது பருத்தித்துறையைச் சேர்ந்தவருடையது என்றும் பருத்தித்துறை முனைக் கடலில் ஆதாரமற்ற நிலையில் இருந்து அலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

இப்படகின் உரிமையாளரிடமும் யாழ். கடல் நீரியல் வளத்திணைக்களத்திடமும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் படகு உரிமையாளரிடம் கையளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

போராளிகளுக்கு சுயதொழில்கடன் வழங்கும் பொருட்டு புனர்வாழ்வு அதிகார சபையினால் கடந்த 11 ஆம் திகதி வை. எம். சி.ஏ. மண்டபத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்முகத் தேர்வில் பங்குபற்றிய பயனாளிகள் தமது கடன் வழங்கலுக்கான விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி 25 ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் கணக்கு இலக்கம் குறிப்பிட்ட வங்கிகளில் கையளிக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறியத்தந்துள்ளார். (அ-9)

# தேசிய மட்டத்தில் சாதனை


விதுஷா

(யாழ்ப்பாணம்)

யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இரு மாணவிகன் தேசிய மட்ட தமிழ்த்தினப்போட்டியில் சாதனை படைத்துள்ளனர்.

பிரிவு-4 இற்கான கவிதைப் போட்டியில் விதுஷா வாசுதேவன் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தையும் பிரிவு 1 இற்கான வாசிப்புப்போட்டியில் தீபிகா லிங்கபாலன் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளதாக அதிபர் கே. வேல்சிவானந்தன் அறிவித்துள்ளார். (அ-9)


தீபிகா




# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கல்லூரி வீதியைச் சேர்ந்த செல்லத்துரை- சபாபதிப்பிள்ளை என்பவரது அடையாளஅட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வருகை தந்து அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு சிறுபான்மை இன மக்களின் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும்

## ஹசன் அலி எம்.பி. தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைத்தேர்தலின் பின்னர் அரசாங்கம் விட்டுக் கொடுப்புடன் செயற்படாவிட்டால் நிலைமை மோசமடையக்கூடும். எனவே அரசாங்கம் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தர்ப்ப சூழ்நிலையினாலேயே அரசாங்கத்துடன் இணைந்துள்ளோம். அதற்காக கூறுவதற்கெல்லாம் தலையை ஆட்டிவிட முடியாது. கிழக்கு மாகாணம் சிறுபான்மை இன மக்களின் களம், இங்கு அம் மக்களின் உரிமைகள், சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்துடன் கொள்கை ரீதியான ஒப்பந்தங்கள் எதனையும் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொள்ளவில்லை. கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தேர்தலின் பின்னர் ஏற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலையால் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தீர்க்கமான முடிபுகளையே எடுக்கும். ஏனெனில் கிழக்கு மாகாண சபையில் வாழும் சிறுபான்மை இன மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்பில் மிகவும் பரந்தளவிலான தீர்வுகள் எட்டப்படல் வேண்டும். அதே போன்று கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசு விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். எதிர்வரும் தேர்தலில் பொதுமக்களின் ஆணையும் தேவையும் வெளிப்படும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் மதிப்பளிக்கவேண்டும்எனக் கூறினார். (அ-2)


## Spot Admission For EUROPE

ஐரோப்பிய நாட்டு பல்கலைக்கழக/கல்லூரிகளின் உயர்கல்வி ஆலோசகர் தற்போது இலங்கையில், நேர்முகப்பரீட்சைகள் நடத்தி ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

2012 August, September அனுமதிக்கான Spot Admission இம்மாதம் 28ம், 29ம் திகதிகளில் யாழ் மண்ணில் உதயன் கேட்போர் கூடத்தில், 30ம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 5ம் திகதி வரை கொழும்பில்




விசா கிடைத்தபின்பு பாடநெறிக்கான கட்டணம் ரூ 150 000 மட்டுமே... வருடத்திற்கு US $2900

- பட்டப்படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- IELTS அவசியமில்லை
- ஆகக்குறைந்த கல்வித்தகைமை O/L
- Sponsorship தேவையில்லை
- கற்கைநெறியின் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தும் வசதி
- விடுமுறைநாட்களில் விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் பகுதிநேர வேலைவாய்ப்புகள்
- குறைந்த வாழ்க்கைச் செலவு
- குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கொள்ளும் வசதி

- MBBS
- Engineering
- Aircraft Flight Operation (Pilot)
- Management
- Hotel & Tourism
- Computing
- Automation
- Marketing
- Banking
- Nursing • Law
- HR • Design

1000's of courses...

STUDY/ VISIT/ BUSINESS
• Sweden • New Zealand • Italy
• German • Singapore • UK
• France • Ukraine • Cyprus

072 62 69 956
077 354 64 00
87, பேராதெனிய வீதி, கண்டி.

Rohaka (Pvt) Limited
வெளிநாட்டுப் பட்டப்படிப்பிற்கான ஆலோசகர்கள்
91, 5 வது மாடி, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 04.
(மயஸ்ரிக் சிட்டி அருகில், சிங்கர் கட்டிடத்தொகுதியில்)
தொலைபேசி: 0112 590 445 www.rohaka-global.com



சங்கானை வளர்பிறை பட்டுச் சோலையின் மாபெரும் ஆடித்தள்ளுபடி மலிவு விற்பனை

காலம் 25.07.2012 முதல் 02.08.2012 வரை



| | |
|---|---|
| சாறி கொட்டன் | 1~~2~~00- 1100 |
| சல்வார் | 4~~5~~00-3200 |
| ஸ்கேட் | 8~~0~~0-400 |
| பிளவுஸ் | 5~~0~~0-350 |
| சேட் | 8~~0~~0 - 550 |
| ரவுசர் | 1~~0~~00 - 800 |



மற்றும் அனைத்து ஆடைகளும் விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்

(068)


## வரலக்ஷ்மி விரத விழா

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரத விழா எதிர்வரும் 27 ஆம் திகதிவெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைஅறிவித்துள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு மஹாலக்சுமிக்கு விசேட அபிஷேகம், விசேட பூஜை என்பன நடைபெற்று வரலக்சுமி காப்பு வழங்கலும் நடைபெறும். (அ-9)

# முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடங்கள்

கீழ் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை தலைவர், முல்லை. கிழக்கு, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கரைச்சிக் குடியிருப்பு முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்

1. பொதுமுகாமையாளர் 101/8

சம்பள அளவுத்திட்டம் 11200-14100
140 ×10-150 ×10

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

இ) கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

02) களஞ்சிய முகாமையாளர் 208/14

சம்பள அளவுத்திட்டம் 9700-11350
80 ×10-83 ×10

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணம்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், வர்த்தக கணிதம், எண்கணிதம், சிங்களம்,தமிழ், மொழி என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

03) காரியாலய சேவகர் 317/17

சம்பள அளவுத்திட்டம் 8950-10300
65 ×10-70 ×10

**தகைமை**

அ) 8 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்

**நிபந்தனைகள்**

01. வயதெல்லை 18-45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

02.கூட்டுறவு சங்கங்களில் கடமைபுரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப் படிவம் அனுப்பப்படவேண்டும்.

03. விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும்.

04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேட படிகளும் வழங்கப்படும்.

05. மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:-2012.07.19

தலைவர்
முல்லைத்தீவு கிழக்கு,
பனை தொன்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கரைச்சி குடியிருப்பு முல்லைத்தீவு.

(சி-592)


## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

பிறப்பு:- 1978 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- உத்தரம் 2
கி.பா:-34 , 7 இல் செவ்
தொழில்:- வங்கி ஊழியர்
B/169

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்:-ரோகினி 4
உயரம்:-5'5"
கி.பா:-106, 7 இல் செவ்
தொழில்:-உதவிப்பொறியியலாளர்
B/119

பிறப்பு:- 1980 கிறிஸ்தவம்
நட்சத்திரம்:- மிருகசீரிடம் 3
உயரம்:- 5'3"
கி.பா:-48
தொழில்:-அரச திட்டப்பணிப்பாளர்
B/139

பிறப்பு:- 1980 இந்து
நட்சத்திரம்:-பரணி 2
உயரம்:- 5'3"
கி.பா:-18
தொழில்:-வியாபாரம் (சொந்தமாக)
B/093

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-அவிட்டம் 3
உயரம்:- 4'10'
கி.பா:-50, 7 இல் செவ்
தொழில்: ஆங்கில ஆசிரியை
G/122

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: கார்த்திகை 4
உயரம்:-4'10"
கி.பா:-40.25, 1 இல் செவ்
தொழில்:-(நூலகர் விஞ்ஞானம்)
G/123

பிறப்பு:- 1987 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பரணி 1
உயரம்: 5'2"
கி.பா:-43.25, 1 இல் சூரி, செவ்
தொழில்: - ஆங்கில ஆசிரியை
G/120

பிறப்பு:- 1964 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூரம் 4
கி.பா:-77.75 ,
தொழில்:- ஆசிரியை
G/109


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் ஈழத்தமிழர் படுகொலை நடைபெறுவதற்கு தமிழருக்கென அரசியல் கட்சி இல்லாமையே காரணம்

## தமிழன் தமிழனாகவே வாழ வேண்டும் என்கிறார் சீமான்



தமிழ் நாட்டில் 8 கோடி தமிழர்கள் இருந்தாலும் அவர்கள் தமிழர்களாக இல்லாமலும் தமிழருக்கென்று ஒரு அரசியல் கட்சி இல்லாமலும் இருந்தமையே இலங்கை அரசு இந்திய அரசின் துணையோடு தமிழினத்தை படுகொலை செய்ததை தடுத்து நிறுத்த முடியாததற்கு காரணம் என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சீமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் சீமான் உரை நிகழ்த்துகையில்,

கச்சதீவு எங்கள் பாட்டன் சேதுபதி அரசுக்கு சொந்தமானது. ஆனால், அதனை தமிழனை கேட்காமல் தூக்கி இலங்கைக்கு கொடுக்கிறது இந்திய அரசு. இதனை தட்டிக்கேட்டால் பிரிவினைவாதம் என்றும் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராக பேசுவதாகவும் கூறி சிறையில் அடைக்கிறது.

இலங்கையுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள கச்சதீவை தூக்கி இலங்கைக்கு கொடுப்பதை எதிர்க்கும் நம்மை பார்த்து பிரிவினைவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இலங்கையில் இந்திய அரசின் துணையோடு தமிழினத்தை இலங்கை அரசு படுகொலை செய்ததை தடுத்து நிறுத்த முடியாததற்கு காரணம் தமிழ்நாட்டில் 8 கோடி தமிழர்கள் இருந்தாலும்அவர்கள் தமிழர்களாகவே இல்லாததே காரணமாகும்.

மதத்தாலும் சாதிகளாலும் பிளவுண்டு கிடந்த காரணத்தினாலும் நம்மை ஆண்ட கட்சி தமிழின உணர்வற்று டில்லியின் அடிமையாக இருந்த காரணத்தினாலும் தான் இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினப் படுகொலையை நம்மால் தடுத்து நிறுத்த முடியாமல் போனதாகும்.

தமிழ் நாட்டின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். தமிழினத்தின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டுமென்றால் தமிழ் நாட்டில் தமிழர் ஆட்சி மலர வேண்டும். சாதி, மத, பேதங்களை கைகழுவிவிட்டு மொத்த தமிழரும் சேர்ந்து ஒற்றைத் தமிழரை ஆதரித்தால் மட்டுமே தமிழ்நாட்டில் தமிழர் ஆட்சி சாத்தியம்.

ஒவ்வொரு நாளும் பறிபோகும் தமிழ் நாட்டின் உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்றால் தமிழ்நாட்டிற்கு மாநில சுயாட்சி வேண்டும். அது நிறைவேற வேண்டுமெனில் இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி மலர வேண்டும்.

தமிழினத்தை அழித்தொழிக்க இலங்கை அரசுக்கு ஆதரவு தந்ததற்கு காரணமாம். இந்தியாவின் தென்பகுதியின் பாதுகாப்பு கருதியே என்று இந்திய மத்திய அரசு கூறியது. ஆனால், தமிழினம் அழித்தொழிக்கப்பட்டு போர் முடிவுற்ற இந்த மூன்றாண்டு காலத்தில் சீனாவும் பாகிஸ்தானும் வலிமையாக கால் ஊன்றிவிட்டன.

இலங்கையுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ள தூக்கிக் கொடுத்த கச்சதீவில் இன்றைக்கு சீனாவின் கடற்படை காலூன்றியுள்ளது. இதனால் இந்தியாவின் பாதுகாப்பு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. இதுதான் இலங்கையுடன் நட்பு கொண்டதற்கு கிடைத்த பரிசு.

நமது நாட்டின் மீனவர்கள் 500 இற்கும் அதிகமானோரை கொன்றொழித்த இலங்கையை நட்பு நாடு என்று இன்றுவரை பேசிக்கொண்டிருக்கிறது டில்லி அரசு. அதனுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு ஆட்சியில் பங்கேற்றுக்கொண்டு இலங்கைத் தமிழர்களின் உரிமை பற்றி பேசுகிறது தி.மு.க. இந்த ஏமாற்று அரசியலை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

(அ-2)

## தட்டுவன்கொட்டி கிராமத்திற்கு வாழ்வாதார உதவி கிடைக்கவில்லை

### மக்கள் ஆதங்கம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தட்டுவன்கொட்டி கிராமத்தில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வதார உதவிகள் வழங்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டிற்கு உட்பட இக்கிராம மக்கள் கடற்றொழிலையே வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகளை போன்று வழங்கப்படுவதில்லை. இதனால் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலை உள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு தொண்டு நிறுவனத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவ் உதவியும் 35 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனக் கூறப்பட்டது. ஆனால் அவற்றின் பெறுமதி குறைவாகவே காணப்பட்டது. தரமும் குறைவாகவே மதிப்பிடப்பட்டது.

அதற்குப்பின்னர் எவ்விதமான உதவிகளும் வழங்கப்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ஒரு வரும் முன்வரவில்லை. எனவே, வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாமல் அல்லலுறும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)



கொமர்ஷல் வங்கி அச்சுவேலி கிளையில் சிறுவர் சேமிப்பு (அருணலு) கணக்கு வைத்துள்ள தரம் 5 (2011) புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு முறையே ரூபா 10ஆயிரம் , 7ஆயிரத்து 500, ரூபா 5 ஆயிரம் பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கும் நிகழ்வு அண்மையில் வங்கி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் க.விவேகானந்தராஜா வங்கி அதிகாரி பொ.சிவமயூரன் ஆகியோருடன் பரிசு பெற்ற மாணவர்கள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

## சட்டம், ஒழுங்கு சீரழிய ஒருபோதும் இடமளிக்கமுடியாது - ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் சட்டத்தை உச்ச அளவில் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. நீதிமன்ற இறைமையை பாதுகாப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. சட்டம், ஒழுங்கு சீரழிய ஒரு போதும் இடமளிக்க முடியாது. சட்டம், ஒழுங்கு இல்லாமல் நாடொன்றை ஆட்சிசெய்ய முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி கண்ணொருவ விவசாய கட்டட வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய விவசாய வாரக்கண்காட்சியில் பங்குபற்றி உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

அன்று விவியன் குணவர்த்தன மனித உரிமைகள் வழக்கில் வெற்றிபெற்ற சந்தர்ப்பத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதியின் வீட்டுக்கு கல்லெறியப்பட்டதையும் ஜனாதிபதி நினைவுபடுத்தியதோடு அன்று நாட்டின் ஜனநாயகம் இவ்வாறுதான் பாதுகாக்கப்பட்டது என்றும் கூறினார்,

1978 ஆம் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் செய்த சந்தர்ப்பத்தில் நீதிபதிகள் உச்ச நீதிமன்ற நீதியரசர் முன்பாக சத்தியப் பிரமாணம் செய்தனர்.

ஆனால், அது ஜனாதிபதிக்கு முன்பாக இடம்பெற வேண்டுமென்றும் சத்தியப் பிரமாணம் சரியான முறையில் இடம்பெறவில்லையென்றும் கூறி நீதிபதிகள் நீதிமன்றம் சென்ற போது நீதிமன்றக் கதவுகள் இழுத்து மூடப்பட்டிருந்த யுகமும் இந்த நாட்டில் இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நான் தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணி. எமது சட்டத்தரணி எமது சட்டத்தொழில் துறையும் நீதித்துறையும் மிகவும் சிநேகபூர்வமாக செயற்படுகின்றன. நீதிச் சுதந்திரத்தை இல்லாமல் ஆக்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது அரசாங்கம் துணைபோகாது என ஜனாதிபதி தெரிவித்தார். (அ-2)

## தமிழ்பேசும் நீதிபதிகளின் வெற்றிடம் நிரப்பப்படவேண்டும்

### விசாரணைகளை விரைவாக்க இதுவே வழி என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

நாட்டில் தமிழ் பேசும் நீதிபதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனாலேயே சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்களை விசாரிப்பதற்கான செயற்பாடுகள் தாமதமடைகின்றன.

நீதிபதிகளின் தட்டுப்பாடு தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி புதிய நீதிபதிகளை நியமிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது எனவும் புதிதாக சுமார் 90 நீதிபதிகளை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதியினை பெறுவதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

புதிய நீதிபதிகளின் நியமனத்தின் ஊடாக விடுதலைப்புலிகள் இயக்க சந்தேக நபர்களின் விசாரணைகளை துரிதப்படுத் முடியும் என எதிர்பார்க்கிறேன்.

இதேவேளை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்க சந்தேகநபர்களை விசாரிப்பதற்காக வெலிக்கடை சிறைச்சாலையினுள் புதிதாக நிதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் விடுதலைப்புலிகள் சந்தேக நபர்களை விசாரிப்பதற்காக மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் நீதிமன்றங்களினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மிக விரைவில் குறித்த நீதிமன்றங்கள் செயற்பட ஆரம்பிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க்கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு

# AP KITCHEN LAPTOP™

வழங்கும் விசேட விலைக்கழிவுகள்

மின்காந்த அடுப்புக்கள்




- இது மின்காந்த அலைகள் (Magnetic Waves) மூலம் செயற்படுவதனால் தீ இல்லை, புகை இல்லை, A/C அறையிலும் சமைக்கலாம்.
- எரிவாயுவுடன் ஒப்பிடும் போது 50% இலாபகரமானது, அத்துடன் விரைவாகவும் சமைக்கலாம்.
- ஒரு நாள் சமையல் செலவு ஒரு அலகு (1 Unit) மின்சாரம்.
- 100% மின்சார அபாயம் அற்றது.

**ஒரு வருட உத்தரவாதத்துடன் மேலும் இரண்டு வருட இலவச சேர்விஸ்**

(SC-5974)

VISA MasterCard AMERICAN EXPRESS

0% Easy Payment For Credit Card Holders
*conditions Apply

**Hotline 0772 35 95 35**

www.apkitchenlaptop.com

APGraphic

**No.368/1, Galle Road, Wellawatte, Colombo 06. Tel: 011 2364696, 011 4255565**

**Branch: 124D, Palaly Road, Jaffna. Tel: 021 222 4749**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 24:- அதிகமாக இனிப்புகள், சொக்லேட்டுகள் சாப்பிட்டால் நீரிழிவு நோய் வருமா?**

**பதில்:-** வராது. ஆனால், நீரிழிவு நோய் பரம்பரை வியாதியாக இருந்தாலோ ஒருவரின் உடல் எடை அதிகமாக இருந்தாலோ நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு உண்டு.

**கேள்வி 25:- கணவனுக்கு நீரிழிவு நோய் இருந்தால் மனைவிக்கும் வருமா?**

**பதில்:-** வராது. காரணம் நீரிழிவு நோய் ஒரு தொற்று நோய் அன்று. எனினும் கணவன், மனைவி இருவருக்கும் நீரிழிவு நோய் இருந்தால் குழந்தைகளுக்கு வரும் வாய்ப்பு அதிகமாகும்.

**கேள்வி 26:- நீரிழிவு நோயாளி பாலியல் உறவை தவிர்க்க வேண்டுமா?**

**பதில்:-** வேண்டாம். ஒரு நீரிழிவு நோயாளி சாதாரண மனிதனைப் போல் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். பாலியல் உறவைப் பொறுத்தமட்டில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. எனினும் உங்கள் மனைவியைத் தவிர வேறு யாருடனும் பாலியல் உறவு வைத்துக் கொள்ளாதீர்கள். அது ஆபத்து!

**கேள்வி 26:- நான் க்ளைகோமெட் மாத்திரை பயப்படுத்தத் தொடங்கியதும் எனக்கு வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கு உண்டானது. அதனால் இம்மாதிரி மாத்திரைகளை நான் பயன்படுத்தாமல் நிறுத்தி விடலாமா?**

**பதில்:-** இம் மாத்திரைகளைப் பயன்படுத்தத் தொடங்கிய முதல் ஒன்றிரண்டு வாரங்களுக்கு வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு வரும். ஆனால், மெல்ல மெல்ல குறைந்து விடும். இம் மாத்திரைகளை உணவு சாப்பிடும் பொழுது அல்லது உணவு சாப்பிட்ட பின்னர் உட்கொண்டால் ஒரு பிரச்சினையும் வராது. அப்படியும் பிரச்சினை வந்தால் உங்கள் மருத்துவரைக் கலந்து ஆலோசனை பெறுங்கள்.

**கேள்வி 28:- காலையில் மாத்திரை போட மறந்து விட்டால் பின்னர் இரண்டு மாத்திரையாகச் சேர்த்துப் போட்டுக் கொள்ளலாமா?**

**பதில்:-** கூடாது. மாத்திரை போடவில்லை என்ற நினைவு வந்தவுடனேயே மாத்திரையைப் போட்டு விடுங்கள். நீண்ட நேரம் ஆகி விட்டால் அப்போதைக்குப் போட வேண்டிய மாத்திரையை மட்டும் போடுங்கள். இரண்டு மாத்திரை போடக்கூடாது.

**நீரிழிவு நோயும் கர்ப்பிணிகளும்**

**கேள்வி 01:- கர்ப்ப காலத்திலான ஊட்டச் சத்துக் குறைவிற்கும் நீரிழிவிற்கும் தொடர்புண்டா?**

**பதில்:-** பொதுவாக கர்ப்ப காலத்தில் பெண்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவர். எனினும் குழந்தை பிறந்த பின்னர் அது சரியாகி விடும். பல்வேறு ஆய்வுகள் கர்ப்ப காலத்திலான ஊட்டச்சத்துக் குறைவு, கருவிற்கு இன்சுலினை எதிர்க்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்கிறது என்று தெளிவாகக் கூறுகின்றன. தாயின் வயிற்றிலிருந்து வெளி வந்த பின்னரும் அக்குழந்தையிடம் இந் நிலை அப்படியே நிலைத்திருக்கும். இதன் காரணமாக அக்குழந்தையினால் சீனி மற்றும் மாச்சத்தினை முறையாக ஏற்றுக் கொள்ள இயலாது. தாயின் ஊட்டச் சத்துக் குறைவின் விளைவாக குழந்தை ஆயுள் முழுவதும் நீரிழிவு நோயாளியாகி விடுகிறது. இவ்வகை குழந்தை பிறக்கும்பொழுது உடல் எடை மிகவும் குறைவாக இருக்கும்.

**கேள்வி 02:- நீரிழிவு நோய்க்கும் கர்ப்பம் உண்டாவதற்கும் நேரடித் தொடர்புண்டா?**

**பதில்:-** நீரிழிவு என்பது ஒரு பொதுவான நோயாகும். அது ஆண், பெண் இருபாலரையும் சமமாக பாதிக்கும். நீரிழிவு நோய் இருப்பது ஆரம்பத்தில் ஒரு சிலருக்கு தெரியாது. கருவுற்ற பின்னர் சோதித்துப் பார்க்கையில் அந் நோய் இருப்பது கண்டிப்பாகத் தெரியவரும்.

கருவுற்ற மூன்று மாத காலத்தில் இரத்தத்தில் சீனி அளவு அதிகமாக இருந்தால் குழந்தையிடம் உள்ளார்ந்த குறைபாடுகள் இடம் பெறத் தொடங்கும். இவ் உள்ளார்ந்த குறைபாடுகளை தவிர்க்க விரும்பினால் கரு உருவாவதற்கு முன்பும் கருவுற்ற காலத்திலும் ஒரு பெண் தனது இரத்தத்தைப் பரிசோதித்து சீனி அளவு எவ்வளவு இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அடுத்த மூன்று மாத காலத்தில் அப் பெண்ணின் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் மனதளவில் பிறக்கும் குழந்தை பலவீனமாகி விடும்.

கடைசி மூன்று மாதங்களில் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் குழந்தை இயல்பைவிட பெரிதாகிவிடும். பின்னர் பிரசவமும் இயல்பாக இருக்காது. இதன் விளைவாக குழந்தையை சிசேரியன் அறுவை சிகிச்சையின் மூலம்தான் வெளியே எடுக்க வேண்டும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கருச்சிதைவு, அரைகுறைப்பிரசவம், உள்ளார்ந்த குறைபாடுகள் மற்றும் குழந்தையின் அளவு பெரிதாக இருத்தல் போன்ற பிரச்சினைகள் உண்டாகும். (தொடரும்)

**17**

டாக்டர் A.K. ஜிங்கான்

Health Care

## மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# இளமை காக்கும் தலைமுடி

ராஜ வைத்தியம் ஒன்றும் இருக்கிறது. ஆனைத்தந்தத்தை பொடித்துத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சியும் பயன்படுத்தலாம். ஆனைத் தந்தத்தைப் பஸ்மம் செய்து தேங்காய் எண்ணெயில் குழைத்துப் புரட்டுவதும் உண்டு. இதற்கு ஹஸ்திதந்த மஷி என்று பெயர்.

அதிமதுரத்தை பொடித்து குங்குமப் பூ சேர்த்து பாலில் கலந்து பசைபோல் ஆக்கவும். இதைத் தூங்கப் போகும் போது வழுக்கை உள்ள இடத்தில் தேய்க்க வேண்டும். முடி முளைத்துவிடும். இது முடி உதிர்தலையும் தவிர்க்கும். பொடுகை நீக்கும். நவீன மருத்துவத்தில் ஹைட்ரோ கார்ட்டிஸனான் மற்றும் ஸ்டீராய்டு ஊசிகள் தரப்படுகின்றன. அதிமதுரச் செடியில் கார்டிஸோனின் குணம் இருப்பதால் இவ்விளைவு ஏற்படுகிறதோ என்னவோ. ஊமத்தை விதைகள், அதிமதுரம், குங்குமப்பூ, பாலாடை இவற்றைத் தேங்காயெண்ணெயில் காய்ச்சி கருகும் வரைப் பயன்படுத்த வேண்டும். இந்தத் தைலமும் வழுக்கைப் பகுதிகளில் முடி வளர



த்ரிபலா

செய்கிறது. தத்தூர என்ற ஊமத்தை விசத் தன்மை கொண்டது. எனவே, விரல் நுனிகளால் எண்ணெயைத் தொட்டு தடவிய பின்னர் கைகளை நன்றாகக் கழுவிவிட வேண்டும். குழந்தைகளுக்கு இந்த எண்ணெயைப் பயன்படுத்த வேண்டாம். த்ரிபலா சேர்ந்த மருந்துண்டு. அதாவது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் போன்றவற்றை வாணலியில் போட்டு வறுத்து நல்ல கருநிறம் அடைந்தவுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து தலையில் தேய்க்கலாம்.

**முடி உதிர்தல்**

முடி உதிர்வதை தடுப்பதற்கு யஷ்டிமதுலேபம் என்ற மருந்து பயன்படுகிறது. அதிமதுரம் கடையில் கிடைக்கும். இதை மென்மையாக தூளாக்கி கொள்ளவும். ஒரு பீங்கான் தட்டில் 100 கிராம் அளவு போட்டு தினமும் 100 மில்லி பால் ஊற்றி வெயிலில் வைக்கவும். முதல்நாள் ஊற்றிய பால் காய்ந்த பின்னரே மறுநாள் பால் ஊற்ற வேண்டும். ஈரமிருந்தால் மீண்டும் ஒருநாள் காய வைத்த பின்னர் பால் விட வேண்டும். காலை வேளைகளில் தான் பால் ஊற்ற வேண்டும். இரவில் பால் ஊற்றி காயாதிருந்தால் துர்வாடை வரும். இவ்விதம் ஏழு தடவை பால் ஊற்றி காய்ந்த தூளை அரைலீற்றர் நீலி பிரங்காமலாக தைலத்தில் குழப்பி வைத்துக் கொண்டு தினமும் மயிர்க்கால்களில் தடவித் தேய்த்து வர கேசம் உதிர்தல் நிற்கும். கேசம் நீண்டு கறுத்து வளரும். மயிர்க்கால் வெடிப்பு, பொடுகு இவை நீங்கும்.

**பிருங்காம தைலம்**

- நல்லெண்ணெய் 1 லீற்றர்
- கரிசலாங்கண்ணிச்சாறு 1 லீற்றர்
- நெல்லிக்காய்ச்சாறு 1 லீற்றர்
- பசுவின் பால் 4 லீற்றர்
- அதிமதுரத்தூள் 60 கிராம்

கரிசலாங்கண்ணியைக் கையாந்தலை (கரியாகும் தலை) என்றும் கூறுவர். இதைக் கொண்டுவந்து அதிலுள்ள இதர புல், பூண்டுகளை அகற்ற தண்ணீரில் நன்கு அலசி அலம்பி இடித்துச்சாறு பிழிந்து கொள்ளவும். பச்சைநெல்லிக்காய் கிடைக்கும் காலத்தில் அதையும் அலம்பி இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும். பச்சை நெல்லிக்காய் கிடைக்காத காலத்தில் நல்ல நெல்லி முள்ளியை வாங்கி விதை அகற்றிய பின் 250 கிராம் எடுத்துப் பெருந்தூளாக இடித்து 1 1/4 லீற்றர் வெந்நீரில் முதல் நாளிரவு ஊறவைத்து மறுநாள் நன்கு கசக்கிப்பிழிந்து சாறு எடுத்துக் கொள்ளவும். அல்லது ஒரு கிலோ நெல்லி முள்ளியை (விதையுடனுள்ளது) 4 லீற்றர் தண்ணீரிலிட்டு ஒரு லீற்றர் மிகுதியாக கசாயமாக்கி கொள்ளவும். அதிமதுரத்தை நன்கு இடித்து மெல்லிய தூளாக்கி கொண்டு பசுவின் பாலில் 4 மணி நேரம் வைத்து அம்மியிலிட்டு மிருதுவான கல்கமாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

நல்லெண்ணெயை இரும்பு சட்டியிலிட்டு நன்கு சூடேறும் வரை காய்ச்சி ஆறவைத்து கொள்ளவும். பின்னர் அதில் அதிமதுரக் கல்கத்தையும் சாறுகளையும் பாலையும் கிரமமாக போட்டு திரவாம்சம் சுண்டும்வரை அடிப்பிக்காமலும் கருகாமலும் கவனத்துடன் பிரட்டி விட்டுக் கொண்டு கல்கத்திலுள்ள ஈரம் அகன்று கல்கம் மொற மொற என்றானதும் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும்.

கண், காது, மூக்கு முதலிய புலன்களை இயக்கும் நரம்புகளுக்கு பலமும் குளிர்ச்சியும் அளிக்கக்கூடிய அப்யங்கத் தைலம் தினமும் தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்ய சிறந்த ஸ்நான தைலம். அதிக மூளை வேலையுள்ளவர்கள் இதனால் அப்யங்கம் செய்து மூளைக் கொதிப்பு, இரத்தக்கொதிப்பு முதலிய நோய்களிலிருந்தும் பாதுகாப்பு பெறலாம். கேசங்கள் அடர்த்தியாகவும் அழகாகவும் கருமையுடனும் வளரும். மயிர் உதிர்தல், பொடுகு இவைகளை போக்கும்.

**பேன்**

சில வீடுகளில் பெண் குழந்தைகளின் தலையில் உள்ள பேனை ஒழிப்பதற்கு தாயார் படாத பாடுபடுவாள். பேனைக் கொல்ல ஏதாவது மருந்திருக்கிறதா என்று கேட்பாள். தேங்காய் எண்ணெயில் சிறிது கர்ப்பூரத்தை சேர்த்து தடவினால் பேன் அகலும். வெந்தயத்தை அரைத்து தேய்த்து குளித்தாலும் கர்ப்பூரம் கலந்த நீரில் குறித்தாலும் பேன் மாறும். சில இடங்களில் மூக்குப் பொடியை தலையில் தேய்த்து விடுவார்கள். இரண்டு மணி நேரம் சென்ற பின்னர் தலைக்கு சீகைக் காய் தேய்த்துக் குளித்து விடுவார்கள்.

பேன் அகன்று விடும். வெங்காயத்தை அரைத்து எலுமிச்சம் பழச்சாறு கலந்து மயிர்க்கால்களில் அழுத்தித் தடவி ஒரு மணி நேரம் கழிந்த பின்னர் குளிப்பாட்டினால் பேன் இருந்த இடம் தெரியாமலே ஓடி விடும். எந்தத் தீவிரமான மணமும் பூச்சிகளை விரட்டி விடும். அதனால் தான் என்னமோ பெண்கள் தலைக்கு பூக்கள் சூடிக்கொள்கிறார்கள். இந்தப் பூக்கள் தலையில் இருக்கும் போது பேன் தொந்தரவு வருவதில்லை. சீதாப்பழ விதைகளை நசுக்கி தலையில் தேய்த்துக் கொண்டால் பேன் வராது.

சீதாப்பழ கசாயம், ஊமத்தை இலை கசாயம் பயன்படுத்தலாம். கடலைமாவும் சேர்த்துக் குளிக்கலாம்.

**பொடுகு (Dandruff)**

இரண்டு தேக்கரண்டி வெந்தயத்தை இரவு தண்ணீரில் ஊறப் போடவும். காலையில் அந்த வெந்தயத்தை அரைத்து தலையில் தேய்த்து அரைமணிநேரம் வைக்கவும். பின் சீகைக்காய் தேய்த்து கழுவிவிடவும். கடைசியாக தண்ணீர் விட்டுக் கழுவும் போது எலுமிச்சம்பழ சாற்றை சேர்க்கவும். வாரத்திற்கு இரண்டு முறை பச்சைப்பயறு மாவை தயிரில் கலந்து தலைக்கு குறித்து விடவும். பொடுகு மறைந்துவிடும்.

பொடுகு மேற்கொண்டு வராமலிருக்க ஊமத்தையிலையால் காய்ச்சப்பட்ட துர்தூர பத்ராதித் தைலத்தை பயன்படுத்தவும். சில பெண்கள் தேங்காய்ப்பாலை தலையில் தேய்த்துக் குளிக்கிறார்கள்.



வெந்தயம்

இதனால் முடி நன்றாக வளர்கிறது. எலுமிச்சம்பழத்தை உலரவைத்து பொடியாக்கி கொள்ளவும்.

ஆலமரத்தின் விழுதை யும் இதுபோல் பொடியாக்கிக்கொள்ளவும். இந்த பொடிகளை சம அளவு தேங்காய் எண்ணெயில் காய்ச்ச வேண்டும்.

இந்த எண்ணெயை வடிகட்டி தலைக்கு உபயோகிக்கலாம். அறுகம்புல், கடுக்காய், கரிச லாங்கண்ணி, மருதாணி, அதிமதுரம், கறிவேப்பிலை போன்றவற்றை தேங்காயெண்ணெயில் காய்ச்சினால் அது நல்லதொரு முடி வளரும் தைலமாகும். வேப்பிலை பொடியை தலைக்கு தேய்த்தும் குளிக்கலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 197


ஜப்பானிய இராணுவத்தின் போர்க்குற்றங்கள்- போர்க்கைதிகளின் கண்ணைக் கட்டிவிட்டு சுட்டுக்கொல்கின்றனர்


டோக்கியோ சர்வதேச ட்ரிப்யூனல்-போர்க்குற்ற விசாரணை மன்றம்



டோக்கியோ ட்ரிப்யூனல்-போர்க்குற்ற விசாரணை மன்றத்தின் நீதிபதிகள்

**ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி : உடன்பாட்டில் கையெழுத்திடுதல்**

**டோக்கியோ சர்வதேச ட்ரிப்யூனல்**

...பரந்த அளவிலான கொலைகள் மரண பவனிகள் ஆகியவற்றின் போது நோய்வாய்ப்பட்டவர்கள் உட்பட போர்க்கைதிகள், நன்கு பயிற்றுவிக்கப்பட்ட துருப்புகளால் கூட தாங்க முடியாத சூழ்நிலைகளில் நீண்ட தூரங்களைக் கடக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர், சூரிய வெப்பத்திலிருந்து எவ்வித பாதுகாப்பையும் அளிக்காமல் கொடும் சூரிய வெக்கையில் கட்டாய உழைப்பிற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் தங்குமிடங்களும் மருந்துகளும் அளிக்கப்படாததால் ஆயிரக்கணக்கானோர் நோய்நொடிகளால் பாதிக்கப்பட்டு மாண்டனர், சாட்சியங்களுக்காக அல்லது ஒப்புதல் பெறுவதற்காக இவர்களுக்கு எதிராக சகலவித சித்திரவதை முறைகளும் கையாளப்பட்டன, மனிதர்களைக் கொன்று உண்ணக் கூடச் செய்தார்கள். விசாரணையின் போது நிரூபணங்கள் காட்டப்பட்ட மிருகத்தனமான கொடிய நடவடிக்கைகளில் மேலே கூறப்பட்டவை ஒரு சில மட்டுமே.

சோவியத் யூனியனுக்கு எதிரான ஜப்பானின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பற்றிய பிரச்சினை விரிவாக ஆராயப்பட்டது. ஹசன் ஏரியருகே சோவியத் யூனியனின் மீதும் ஹால்ஹின்- கோல் ஆற்றருகே மங்கோலிய மக்கள் குடியரசின் மீதும் படையெடுக்கப்பட்டது, தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருந்து. பாசிச ஜேர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியபின் ஜப்பான் கயமைத்தனமாக நடந்து கொண்டதையும் ட்ரிப்


போர்க்குற்ற விசாரணை மன்றத்தில் பிரதிவாதிகள்

யூனல் சரிவர மதிப்பிட்டது.

தட்ஸுவா, ஹிரோட்டா, இடகாகி, மட்சுயி, டயிஹாரா, கிமுரா, முட்டோ, ஆகிய ஏழு பேர்களுக்கு தூக்குதண்டனையையும்; 16 பேர்களுக்கு ஆயுள் தண்டனையையும்; ஒருவனுக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனையையும் இன்னொருவனுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் இராணுவ ட்ரிப்யூனல் விதித்தது. முன்னாள் அயல் விவகாரத் துறையமைச்சர் மட்சுவோக்காவும் அட்மிரல் நகானோவும் விசாரணையின் போது இறந்தனர். ஜப்பானிய இராணுவ வெறியின் சித்தாந்தவாதியாகிய ஒகாவா பைத்தியக்கரனாக ஒப்புகுக்கொள்ளப்பட்டு அவன் மீதான விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது.

டோக்கியோ விசாரணையின் முடிவுகளைத் தொகுத்துரைக்கையில் இஸ்வேஸ்தியா பத்திரிகை 1948 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி பின்வருமாறு எழுதியது. "பிரதான ஜப்பானிய குற்றவாளிகளின் வக்கீல்கள், மற்ற பாதுகாவலர்களின் ஏராளமான முயற்சிகள், ஒரு சில ட்ரிப்யூனல் உறுப்பினர்களின் தந்திரங்கள் ஆகியவற்றையெல்லாம் பொருட்படுத்தாது நியாயமான, கண்டிப்பான தீர்ப்பை அளித்ததில் தான் ட்ரிப்யூனலில் சிறப்பு அம்சம் அடங்கியுள்ளது... விசாரணை நடந்த நேரம் முழுவதும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிரபல பதவிகளில் உள்ள பலர் பிரதான ஜப்பானிய போர்க் குற்றவாளிகளுக்கு ஆதரவாக அவர்களைப் பாதுகாத்து நின்றனர். தண்டிக்கப்பட்டவர்களின் விதியை இலகுவாக்குவதற்காக இப்பாதுகாவலர்கள் கடைசி முயற்சியை மேற்கொள்ளக் கூடும் என்பது சாத்தியமே"

அப்படியேதான் நடக்கவும் செய்தது. ஜெனரல் மைக்கல் ஆர்தர் தீர்ப்பை ஆமோதித்தார். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து அவர் தண்டிக்கப்பட்ட ஹிரோட்டா, டயிஹாராவிடமிருந்து மனுக்களை வாங்கி அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டிற்கு அனுப்பினார். மற்ற தண்டனையைப் பெற்றவர்கள் விஷயத்தில் தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்தார். பின்னால் கிடோ, ஓகா, சாட்டோ, சிமாடா மற்றும் தோகோ ஆகியோரும் மனுக்களை அளித்தனர். அமெரிக்க சுப்ரீம் கோர்ட் இவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

தன் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்த மைக்கல் ஆர்தரின் நடத்தையும் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டின் சட்ட விரோதமான தலையீடும் முற்போக்கு மக்கள் அனைவர் மத்தியிலும் ஒரு நியாயமான எதிர்ப்பைத் தூண்டிவிட்டது. இது பிரதான

# இராணுவ ஜப்பானின் தோல்வி

ஜப்பானிய போர்க் குற்றவாளி களின் மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதென்ற சுப்ரீம் கோர்ட்டின் முடிவை எதிர்க்கும் கட்டாயத்திற்கு அமெரிக்க அரசாங்கத்தை உள்ளாக்கியது.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதி இரவு தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரும் டோக்கியோ [illegible] சிறை முற்றத்தில் தூக்கிலிடப்பட்டனர்.


ஜப்பானிய இராணுவம் சீனக்கைதிகளை உயிருடன் புதைத்து கொன்றுள்ளது

நியூரென்பார்க் விசாரணையைப் போன்றே டோக்கியோ இராணுவ ட்ரிப்யூனலும் சர்வதேசக் கோட்பாடுகள், சட்ட வரையளவுகளை நிறைவேற்றுவதில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது, ஜப்பானிய ஆக்கிரமிப்பை அதன் சகலவித வடிவங்களிலும் கண்டித்தது, சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ வெறிகொண்ட ஜப்பான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதை ஒப்புக்கொண்டது.

டோக்கியா விசாரணை பிரகடனப் படுத்திய, நடைமுறையில் பயன்படுத்திய சட்டக் கோட்பாடுகள் நவீன சர்வதேச சட்டத்தில் இடம் பெற்றுள்ளன, சர்வதேச குற்ற சட்டத்தின் அம்சங்களாக இவை பின்னால் ஐ.நா.சங்கத்தால் ஆமோதிக்கப்பட்டன. சமாதானத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்பை இவை முன்னனுமானிக்கின்றன.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

169

## கஞ்சனுக்கு கிடைத்த பரிசு



ஆக்ரா நகரில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவன் மிகப் பெரிய செல்வந்தனாக இருந்தும் கருமியாக இருந்தான்.

பலர் அவன் தனக்கு உதவி புரிவான் என எண்ணி அவனைக் காண்பர். ஆனால் அவனோ யாருக்கும் எதையும் தரமாட்டான். அவர்கள் புன்னகைத்து செல்லுமாறு சமாளித்துப் பொய்யாக எதையாவது கூறுவான்.

ஒருநாள் ராய்தாஸ் என்ற இளம் கவிஞன் அவனைக் காணச் சென்றான். அவனைப் புன்முறுவலோடு

## பீர்பால் கதைகள்

வரவேற்று உனக்கு என்னால் என்ன உதவி செய்ய முடியும் எனக் கேட்டான் செல்வந்தன்.

நான் கவிதைகள் புனைந்துள்ளேன். உங்களிடம் அவற்றைப் பாடிக் காண்பிக்க ஆசைப்படுகிறேன்! என்றான் ராய்தாஸ்.

என்ன அற்புதம்! எனக்கு கவிதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவற்றைப் படித்துக்காட்டு! என்றான் கருமி.

ராய்தாஸின் கவிதைகளை மிகவும் ரசித்துக் கேட்டான். அதிலும் தன்னைப் பணத்தின் அதிபதியான குபேரனோடு ஒப்பிட்டுப் பாடிய பாடல் அவனை மிகவும் கவர்ந்தது.

உன்னுடைய கவிதைகளைக் கேட்டு நான் பூரிப்படைகிறேன். உன்னுடைய திறமைக்கு நான் பரிசளிக்க விரும்புகிறேன்.

தயவுசெய்து நாளை வந்து பரிசுகளை பெற்றுச் செல் என்றான் கருமி.

ராய்தாஸ் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் சரியென தலையாட்டி விட்டுச் சென்றான். ஆனால் மறுநாள் செல்வந்தனைக் காணச் செல்லும் போது அவன் அப்போது தான் ராய்தாஸைக் காண்பது போல நடித்தான்.

நான் உங்களை நேற்று கண்டு கவிதைகளைப் பாடினேன்.

இன்று என்னைப் பரிசுகள் பெற்றுச் செல்ல வரச் சொன்னீர்கள்! என்றான் ராய்தாஸ்.

ஓ! ஆமாம்! நீ ஒரு நல்ல கவிஞன் தான். ஆனால் உனக்குப் பொது அறிவு இல்லை. உனக்குப் பரிசுகளை அளிக்க விரும்பியிருந்தால் நான் நேற்றே உனக்கு அளித்திருப்பேன். உன்னை புண்படுத்தக்கூடாது என்பதால்தான் இன்று வரச் சொன்னேன். என்னை நீ வீணாக தொல்லை செய்கிறாய்! என்றான் செல்வந்தன்.

ராய்தாஸ் இதனைக் கேட்டு சோகமுற்றான். ஆனால், அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

அதனால் அங்கிருந்து சென்று விட்டான். அவன் வீடு திரும்புகையில் எதிரே குதிரையில் பீர்பால் வருவதைக் கண்டான்.

பீர்பால் அவர்களே! தாங்கள் தான் நான் என்ன செய்ய வேண்டும் எனச் சரியாகக் கூறவல்ல தகுதியுடைய மனிதர்! என்றான்.

என் வீட்டிற்கு வந்து விபரமாகக் கூறு என்றார் பீர்பால்.

ராய்தாஸ், பீர்பாலிடம் நிகழ்ந்தது அனைத்தையும் கூறினான்.

அச்செல்வந்தன் செய்தது தவறு. அவனுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும். சரி, உனக்கு நம்பிக்கையான நண்பன் யாராவது உள்ளானா சொல்? பீர்பால் கேட்டார்.

உள்ளான்! என ராய்தாஸ் கூறினான்.


அவனிடம் நீ சென்று இந்த ஐந்து தங்க நாணயங்களைக் கொடு. அதை வைத்துக் கொண்டு அவனை வரும் பௌர்ணமி அன்று இரவு ஒரு நல்ல விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொல். அவ்விருந்துக்கு செல்வந்தரை அழைக்கச் சொல். ஏனையவைகளை நான் பின்னர் சொல்கிறேன்! என்றார் பீர்பால்.

ராய்தாஸ் அத் தங்க நாணயங்களை பீர்பாலிடம் இருந்து பெற்றுக் கொண்டு அவனது நண்பன் மாயாதாசைக் காணச் சென்றான். மாயாதாசிடம் பீர்பால் சொன்ன அனைத்தையும் கூறி அந்த தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

இதனை வைத்துக் கொண்டு ஒரு ஆடம்பரமான விருந்துக்கு ஏற்பாடு செய். அச் செல்வந்தனை விருந்துக்கு அழைக்க மறந்து விடாதே! என்றான் ராய்தாஸ்.

மாயாதாஸ் விருந்துக்கு தேவையான பொருட்களை வாங்கினான். பின்னர் செல்வந்தன் வீட்டுக்குச் சென்றான்.

நான் வரும் பௌர்ணமி இரவில் ஒரு ஆடம்பர விருந்து கொடுக்கப் போகிறேன். நீங்களும் அதற்கு வர வேண்டும். எனது விருந்தாளிகளுக்கு நான் தங்கத் தட்டில் விருந்தளித்து பின்னர் அத் தட்டினை அவர்களுக்கே பரிசாகத் தர எண்ணியுள்ளேன்! என்றான் மாயாதாஸ்.



அச் செல்வந்தன் பேராசையுடன் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டான். அவன் பௌர்ணமி இரவுக்காக ஆவலோடு காத்திருந்தான். உயர்ந்த ஆடை அணிகளை அணிந்து கொண்டான்.

செல்வந்தன் மாயாதாசின் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு மாயாதாசையும் ராய்தாசையும் தவிர யாரும் இல்லாததைக் கண்டான். அவனை வரவேற்று அவ்விருவரும் அவனோடு பேசிக் கொண்டிருந்தனர்.

வெகுநேரம் இருவரும் செல்வந்தனோடு பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் செல்வந்தன் வருவதற்கு முன்னரே தங்கள் உணவை உண்டிருந்தனர். அதனால் அவர்களுக்குப் பசிக்கவில்லை.

நேரம் கடந்தது. செல்வந்தனுக்குப் பசி எடுத்தது. அவன் விருந்தில் நன்கு உண்ண வேண்டும் என்ற காரணத்தால் குறைவாகவே சாப்பிட்டிருந்தான். நள்ளிரவை நெருங்கும் போது அவன் பொறுமை இழந்தான்.

எனக்குப் பசிக்கிறது. எப்பொழுது விருந்து தொடங்கும்? எனக் கேட்டான்.

விருந்தா?... என்ன விருந்து?... மாயாதாஸ் கேட்டான்.

ஆனால் நீ என்னை இன்றிரவு விருந்துக்கு அழைத்தாய் அல்லவா? என செல்வந்தன் முறையிட்டான்.

உன்னிடம் ஆதாரம் உள்ளதா? எனக் கேட்டான் ராய்தாஸ். ஆனால் செல்வந்தனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

நாங்கள் உன்னை விருந்துக்கு அழைத்திருந்தாலும் அது உன்னைப் பூரிப்படையச் செய்வதே யாகும்.

எங்களுக்கு மற்றவர்களைப் புண்படுத்த தெரியாது! மாயாதாஸ் நண்பனோடு சேர்ந்து கொண்டான்.

அப்பொழுது பீர்பால் அங்கு வந்தார்.

நினைவிருக்கிறதா? இதைத் தான் ராய்தாஸ் கவிதைகள் படித்துக் காட்டியபோது அவனிடம் நீ கூறினாய்! என்றார் பீர்பால்.

எனது அற்பத்தனமான நடத்தைக்கு நான் மன்னிப்பு கோருகிறேன். ராய்தாஸ் நீ ஒரு நல்ல கவிஞன்.

உனக்கு நான் இந்த முத்து மாலையைப் பரிசளிக்கிறேன்! என்று கூறியவாறு செல்வந்தன் தன் கழுத்திலிருந்த முத்து மாலையைப் பரிசளித்தான்.

கவிதை சார்ந்த தீர்ப்பு நடந்ததைக் கண்டு பீர்பால் மகிழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு தீர்வை வழங்க வேண்டிய பொறிக்குள் அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது

## கிழக்கு தேர்தலை அவசரமாக நடத்த இதுவே காரணம் என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் மூன்று வருட பதவிக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 130 பேர் வரை காணாமல் போயுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்குடா தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய போது கூறியதாவது,

கிழக்கு மாகாண சபையின் செயற்பாடு ஆரம்பித்த பின்பு காணாமல் போன 130 பேரைப் பற்றி என்ன கூறப்போகிறார். அவரால் இவர்களை மீட்டுத் தர முடியுமா?

கிழக்கு மாகாண சபை அமைத்த பின்பு தான் அபிவிருத்தி என்றால் கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்பு இடம்பெற்ற அபிவிருத்தியின் போது கிழக்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் இருந்தாரா? கிழக்கு மாகாண சபை தான் இருந்ததா?

எத்தனை வீடுகள், பாடசாலைகள், கட்டடங்கள், எத்தனை பாலங்கள் அமைக்கப்பட்டன.. இவையெல்லாம் யார் கட்டினார்கள்? அனைத்துமே வெளிநாட்டு அரசாங்கங்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள் என்று வாரிக் கொடுத்தார்கள்.

அதேபோன்று யுத்தத்தல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள் என்று கொடுத்த பணத்தில் தென் பகுதியில் கடுகதி வீதி அமைத்து விட்டு எங்கள் பகுதியில் கண்துடைப்புக்கு இரண்டு, மூன்று கார்ப்பெட் வீதி, ஓரிரு பாலங்கள் அமைத்துள்ளார்கள். அவைகளைக் கண்டு எமது மக்கள் ஒருபோதும் ஏமார்ந்து விட மாட்டார்கள்.

எமது மாவட்ட பிரதியமைச்சர் கருணா தேசிய பட்டியல் என்பதாலும் அவருக்கு கொடுக்கப்பட்ட பொருத்தமற்ற அமைச்சாலும் ஒன்றுமே செய்ய முடியாத நிலையிலுள்ளார். இவர்கள் இருவரையும் ஜெனீவா தீர்மானத்தில் சர்வதேச குற்றவாளிகளாக வைத்துள்ளார்கள். எந்த நேரத்திலும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த தேர்தலில் கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை போட்டியிட விடக்கூடாது என்பதற்காக அவர்களது வேட்பாளர்களை சீர்குலைய வைக்க வேண்டும்.

அவர்கள் சுதந்திரமாக தேர்தலில் பங்கு பற்றுவதை தடுக்க வேண்டும் என்பதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான துரைராஜசிங்கத்தின் வீட்டுக் கதவில் பெரிய பூட்டுப்போட்டு பூட்டினார்கள். அதையும் தாண்டி எமது வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

எந்த சக்தியாலும் எம்மிடமிருந்து பறிக்க முடியாத ஆயுதம் வாக்குரிமை மட்டுமே. அந்த ஆயுதத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையில் அரசாங்கத்தால் பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தி ஜெனீவாவிலே ஒரு தீர்மானத்தினை கொண்டு வந்துள்ளார்கள்.

இந்த தீர்மானம் கொண்டு வந்துள்ள இந்த வேளையிலே எதிர்வரும் மாசி மாதம் இந்த மனித உரிமைகள் குழு கூடுவதற்கு முன் ஏதாவது ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டுள்ள வேளையில் வடக்குக் கிழக்கு இணைப்பு என்ற ஒரு விடயம் முன்வைக்கப்படக்கூடாது என்பதை மையமாகக் கொண்டு தான் இந்த கிழக்கு மாகாண சபையை அவசர அவசரமாக கலைத்துள்ளது. தேர்தலை அவசரமாக நடத்தவுள்ளது. இந்த மண்ணிலே நாம் எதற்காக இரண்டு இலட்சத்துக்கும் மேலாக எமது உறவுகளை இழந்துள்ளோம். ஏன் இழந்தோம் என்று சிந்தித்து பாருங்கள்.

எமது மக்கள் உயிரை துச்சமாக நினைத்து மக்களின் விடுதலைக்காக போராடினார்கள். அந்த நியாய தர்மத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அவர்களுக்காக எமது வாக்குகளை திருப்பி எங்களது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்யுங்கள் என்றார். (அ-2)

## குடும்ப அரசியலுக்குள் நாடு சிக்கித் தவிக்கிறது

### விக்கிரமபாகு தெரிவிப்பு

நாடு குடும்ப அரசியலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. குடும்ப அரசியலிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமென புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். குடும்ப அரசியலுக்கு எதிராக மக்கள் அணி திரளாவிட்டால் இன்னும் சிறிதுகாலத்தில் இந்த நாடு சீரழிந்து விடும். இன்று நாட்டில்மிக விசித்திரமான ஆட்சி நடைபெறுகின்றது.

மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் கேட்க்கப்படும் கேள்விகளுக்கு ஆளும் கட்சியினர் உரிய பதிலளிப்பதில்லை. அரசாங்கத்தின் விசர் வேலைகளினால் மக்களுக்கு வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளது. குறைந்தபட்சம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வேனும் வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம்

ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய

அலங்கார உற்சவம்-2012



ஞான துர்க்கை அம்மன் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் துர்க்காபுரம் எனும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு இந் நந்தன வருடம் 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடாத்த எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளாள்.

அலங்கார உற்சவம் நந்தன வருடம் ஆடி மாதம் 09 ஆம் நாள் (24.07.2012)செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி ஆடிமாதம் 18 ஆம் திகதி (02.08.2012) வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் 10 நாட்கள் நடைபெறவுள்ளது. 09 ஆம்நாள்ஆடி 17ஆம் நாள் (01.08.2012) புதன்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

தினந்தோறும் காலை 9.00மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா, மகேஸ்வர பூசையும் நடைபெறும். உற்சவ காலங்களில் அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞானதுர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.



"இறைபணியே இன்பப் பணி"

ஆலய தர்மகர்த்தா,

சிவத்திரு சி. நவரத்தினம்

(074)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ்த்தேசியத்தின் இருப்பும், அதன் எதிர்காலமும்

## மீள் சிந்திப்புக்கான முன்மொழிவுகள்

## ஆக்கிரமிப்பு அகலுமா?

ம.செல்வின்
நியூஸ்போர்ட்

தேசியம், தேசிய இனப்பிரச்சினை அகியவை தொடர்பாக ஜே.வீ.ஸ்ராலின் கீழ் வருமாறு குறிப்பிடுகின்றார்.

தேசிய இனம் என்பது வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்டதும் தங்களுக்கென ஒரு பொதுவான மொழி, நிலம், பொருண்மிய வாழ்வு ஆகியவற்றுடன் தங்களினை உளவியல் ரீதியாக ஒரு பொதுவான பண்பாட்டுத் தளத்தினுள் உருவகித்துக்கொண்ட நிலையான சமூகமாக வாழும் மக்களினைக் குறிக்கும்.

இங்கு ஒரு தேசிய இனம் கொண்டிருக்கக் கூடிய அடிப்படை அம்சங்கள் கூறுபடுத்தப்பட்டுள்ளன.

அ) வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்டது
ஆ) பொதுவான மொழி
இ) நிலம்
ஈ)பொதுவான பொருண்மிய வாழ்வு
உ) ஒரு பொதுவான பண்பாட்டுத் தளத்தினுள் உளவியல் ரீதியாக தங்களினை உருவகித்துக்கொள்ளல்
ஊ) நிலையான சமூகமாக வாழும் மக்கள் தொகுதி

இலங்கைத் தீவினுள் இலங்கைத் தேசியம் என்ற ஒற்றைப்பரிமாண தேசியத்தினை கட்டியெழுப்ப முடியாமைக்கு இரண்டு விடயங்கள் முக்கியமான தடைகளாக உள்ளன.

ஒவ்வொரு தொகுதியினரும் தாங்கள் வெவ்வேறு வகையில் வரலாற்று ரீதியான கட்டமைப்பினைக் கொண்டவர்கள் என்று தங்களின் உள்மன ஆழத்தில் கொண்டிருக்கும் பதிவு இங்கு முதன்மையாக உள்ளது. அத்துடன் வேறுபட்ட பண்பாட்டுத் தளத்தில் தங்களின் வாழ்வியலினை உருவகித்துக் கொண்டுள்ளதான நிலைமை முதலாவது விடயத்திற்கு மேலும் வலுச் சேர்க்கின்றது. இவை இரண்டும் இலங்கைத் தேசியம் அல்லது சிறீலங்கா தேசியத்தினை முற்றாக மறுப்பதுடன் முரண்பாடுகளினை மென்மேலும் கூர்மைப்படுத்துகின்றது. தமிழ் பேசும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் தமிழினை தங்களது தாய்மொழியாகவும் பொது மொழியாகவும் கொண்டிருந்தாலும் இஸ்லாமிய மக்களினை அவர்களுக்குள் ஒருங்கிணைக்கும் மதம் சார்ந்த குறியீடு ஏனைய பொதுவான மொழி, ஒத்த தன்மையான பண்பாட்டுக் கூறுகள் என்கின்ற விடயங்களினை முற்றாக வலுவிழக்கச் செய்கின்றன.

அதேபோன்று தீவின் மத்திய மலைநாட்டில் தோட்டத்துறை சார்ந்து வாழுகின்ற தமிழ் மக்கள், தமிழ் மொழியினை தாய் மொழியாகவும் பண்பாட்டு விடயங்களில் வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுடன் ஒத்த பண்பாட்டு அம்சங்களையும் கொண்டுள்ளார்கள். எனினும் அவர்களது வரலாற்று ரீதியான கட்டமைப்பு சார்ந்த உருவகமும், வேறுபட்ட பொருண்மிய வாழ்வியலும், அவர்களை ஈழத்தமிழ் தேசியத்திலிருந்து வேறுபடுத்தியுள்ளது.

தமிழர்களும் முஸ்லிம்களும் தீவின் வடக்கு கிழக்கில் பொதுவான நிலப்பரப்பினைக் கொண்டிருந்தாலும் இரண்டு மக்கள் தொகுதி களுக்குமிடையே காணப்படும் சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் வேறுபாடுகளும் நிலப்பசியும் ஏனைய வளங்கள் வாய்ப்புகளுக்காக ஏற்படும் கடுமையான போட்டியும் அவர்களுக்கிடையில் பொதுவான நிலம் என்ற அடிப்படையை இல்லாமல் செய்துள்ளது.

வளங்களினை ஆட்சிப்படுத்துவதற்காக அரசியல் அதிகாரம் வேண்டும்; அரசியல் அதிகாரத்தினைப்பெற தெளிவான வரையறைகளினைக் கொண்ட நிர்வாக அலகும், தேர்தல் தொகுதிகளும் வேண்டும் என்கின்ற தர்க்க ரீதியான செயன்முறை வடக்குக்கிழக்கில் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையே காணப்பட்ட பொதுவான நிலம் என்றன காரணியை பிளவுறச் செய்துள்ளது.

இங்கு மேற்குறிப்பிட்டதற்கு ரீதியான வாத்தினை முன்வைத்ததற்கு காரணம் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையினை மீள் சட்டகப்படுத்த வேண்டிய தேவை உண்டா? என்பதனை ஆழமாகப் புரிந்துகொள்தற்கேயாகும்.

இலங்கைத் தீவினுள் சிங்கள பௌத்த தேசிய வாதிகளினால் முன்னெடுக்கப்படும் சிறீலங்கா தேசியவாதம் வெறும் அடையாளம் சார்ந்த கூக்குரல்அல்ல, என்பதைனை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் அக்கறை கொள்பவர்கள் யாவரும் இலகுவில் புரிந்துகொள்வர்.

பிரித்தானியரிடமிருந்து ஆட்சிஅதிகாரம் கைமாறிய காலத்திலிருந்தே எண்ணிக்கைப் பெரும்பான்மையினைப் பயன்படுத்தி ஏனையதேசிய இனங்களினை மேலாதிக்க உணர்வுடன் அச்சுறுத்துவதே சிங்கள அரசியல் தலைமைகளின் தொடர்ச்சியான செயற்1பாடாக இருக்கிறது. தங்களின் கைகளில் குவிந்துள்ள ஆட்சியதிகார பலத்தினை பயன்படுத்தி இயற்றப்படும் சட்டங்கள் அரசியல் யாப்புகள், நிதிநிர்வாகப் பிரமாணங்கள், அபிவிருத்திக்கான வள ஒதுக்கீடுகள் யாவற்றினூடாகவும் கட்டமைக்கப்பட்ட வன்செயலினை மிகவும் சிறப்பாக முன்னெடுத்தனர். அதற்கும் மேலதிகமாக காலத்திற்குக் காலம் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் இன வன்செயல்களினூடாக அம்மக்களின் சமூக இருப்பினையும், மூலதன திரட்சியினையும், சொத்துடமை உருவாக்கத்தினையும் தகர்த்து எறிந்து கொண்டே இருந்தனர். இச்செயற்பாடுகளின் விளைவுகளினை தொடர்ந்து தக்கவைப்பதற்காக வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்த அப்பாவிச் சிங்கள மக்களை சிங்கள தேசியத்தினை பாதுகாக்கப்போகின்ற எல்லைப் புறக்காவலர்கள், போராளிகள் என்றவாறு மூளைச்சலவை செய்து இனக்குரோத உணர்வு கொண்டவர்களாக உருவேற்றி தமிழ்க் கிராமங்களிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புறங்களிலும் குடியேற்றினார்கள். இந்த நிகழ்ச்சித் திட்டங்களினால் முஸ்லிம் மக்களின் கிராமங்களும் விளைநிலங்களும், மலையகத்து தமிழர்களின் தோட்டங்களும் நகர்ப்புறங்களும் கூட குறிவைத்து சிதைக்கப்பட்டன, சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்விடங்கள், வயற்காடுகள், வளம்தரு வனங்கள், மீன்படித் தளங்களும், கரையோரத்துறைகளும், பிரதான போக்குவரத்துப் பாதைகளின் இணைவு சந்திகளும், நகரங்கள் சார்ந்த வளர்ச்சி மையங்களும், சேவைக் கட்டமைப்புகளும், சிங்கள மக்களினதும் அவர்கள் சார்ந்த நிர்வாக அதிகார பொறிமுறையினதும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

முழுமையான பார்வையில் தமிழ்மக்கள் தங்களினை தேசிய இனமாக நிலைநிறுத்தக்கூடிய அடிப்படைகள் யாவும் ஒவ்வொன்றாகக் குறிவைத்துத் தகர்க்கப்பட்டன.

முஸ்லிம் மக்கள் சிங்கள பௌத்த தேசியவாத அரசுகளில் ஒட்டி உயிர் வாழும் வேண்டா விருந்தாளிகளாக அரசியல் ரீதியாக பலவீனப்படுத்தப்பட்டனர். *சிங்கள ஆட்சியாளர் கள் தங்கள து தீர்மானங்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி கட்டுப்படக் கூடிய தனிநபர்களை தமிழ், முஸ்லிம்மக்களின் பிரதிநிதிகளாகவும் தங்கள் அரசியல் மேடையில் பக்கவாத்தியக்கலைஞர்களாகவும் இணைத்துள்ளனர்.*



சுமார் 70 ஆண்டு கால வரலாற்றினைக் கொண்ட தமிழ் மக்கள் அரசியல்உரிமைக்கான போராட்டம் பல வடிவங்களில், பல தலைமைகளின் வேறுபட்ட அணுகு முறையின் கீழ் பல கட்டங்களினைக் கடந்தது. ஆனால், இவையெல்லாவற்றினையும் முன்னோக்கிய கட்டங்களாக குறிப்பிட முடியாது.

பாம்பும் ஏணியும் என்கின்ற தாயக்கட்டை விளையாட்டில் பல பத்துக்கட்டைகளினைத் தாண்டிய பின்பு பெரியதோர்பாம்பின் கட்டத்துள் பிரவேசித்ததனால் மீண்டும் முதலாம் கட்டப்பெட்டிக்குள் சறுக்கிய நிலையைத்தான் தற்போது ஈழத்தமிழர்கள் அடைந்துள்ளார்கள். விளையாட்டின் வேகத்தில் தாயக்கட்டையினையும் தொலைத்துவிட்டு இருட்டினுள் தேடுகின்றவர்களாகவே இருக்கின்றனர்.

இத்தகைய நிலையில்தான் தமிழ் தேசிய இனப்பிரச்சினையினை மீள் சட்டகப்படுத்துவது தொடர்பான உரையாடலுக்கான இடைவெளி ஒன்று தோன்றியுள்ளது.

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பகுதியில் பருத்தித்துறையிலிருந்து பாணமை வரைக்கும் முல்லைத் தீவிலிருந்து மறிச்சுக்கட்டி வரைக்குமான நீண்ட நிலத்தொடரான தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தினை தமிழீழமாக வென்றெடுப்பது தமிழ் மக்களின் இலக்காக இருந்தது மறுக்க முடியாத உண்மை. ஆயுதபலம் பெருக்கி படை நடத்தி நிலத்திற்கு எல்லை வேலி போடலாம் என்கின்ற கனவு நனவாகாமல் மௌனமாகியது 2009 மே மாதத்தில்.

அதனைத் தொடர்ந்து சிங்கள தேசியவாத அரசியலும் அதன் அரச இயந்திரமும் இராணுவமும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல், சமூக பொருளாதார பண்பாட்டு இருப்பினை நிர்மூலமாக்கும் செயற்திட்டத்தினை விரைவுபடுத்தியுள்ளனர்.

இத்தகைய மிகவும் மோசமான நெருக்கடி நிலையில் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தன்னாட்சி அரசியல் உரிமைக்கான செயற்பாடுகள், கனவுகளாலும் எதிர்வுகூறல் அரசியலினாலும் அச்சுறுத்தும் அடாவடித்தனங்களாலும் நெறிப்படுத்தப்படாமல்– ஒரு தெளிவானதும் வெளிப்படையானதுமான பகுத்தாய்தல் பயிற்சியூடாக தன்னை மீள் கட்டமைக்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையினை மீள சட்டகப்படுத்தல் எனக் கூறும் போது அது தமிழீழத்தினைக் கைவிடுமாறு கோருகின்றார்கள் என்றோ அல்லது சிறீலங்காவின் சிங்கள பௌத்த தேசியவாதத்துடன் உடன்பட்டு இசைந்து அழிந்த போவதற்கான முன்தாயாரிப்பு முயற்சிகள் என்றோ முடிவுக்கு வருதல் மிகவும் அபத்தமானது.

இலங்கத் தீவினுள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் எவ்வாறு வெற்றிகரமாக தங்களினை தக்கவைத்து செழுமைப்படுத்திக்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதே இங்கு முக்கியமானதாகும். இலங்கைத் தீவில் வாழும் மூன்று முக்கிய தேசிய இனங்களிடமும் பலவிதமான பலமும் பலவீனங்களும் உள்ளன. அவற்றினை சிறப்பான முறையிலே விளங்கிக் கொள்வதன் மூலமே இப்பயிற்சியினை சிறப்பாக செய்ய முடியும். இப்பயிற்சி ஒரு தனியொருவரது நிபுணத்துவத்தினாலோ அல்லது ஒத்த சிந்தனைகள் கொண்ட சிலரால் உருவாக்கப்பட்ட குழுக்களால் மட்டுமோ செய்து முழுமையடைய முடியாது.

தமிழ்த் தேசிய இனத்தின் பலம்– பலவீனங்கள் சிலவற்றினை இங்கு உதாரணத்திற்காக நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். தமிழ் மக்களின் முதன்மையான பலம் தங்களினை ஒரு பொதுவான பண்பாட்டுத் தளத்தினுள் உளவியல் ரீதியாக உருவகித்துக் கட்டியெழுப்பியமையாகும். அடுத்து தங்களுக்கென கட்டமைக்கப்பட்ட வரலாற்றினைக் கொண்டிருப்பதுடன் ஒரு தொடர் நிலப்பரப்பினுள் நிலையான சமூகக் கூட்டமாக தங்களினை நிலை நிறுத்திக் கொண்டுள்ளமையுமாகும்.

இதற்கு மறுதலையாக பல பலவீனங்கள் கொண்ட தேசிய இனமாக தமிழ் மக்கள் மாறிக்கொண்டே இருக்கின்றனர். இவற்றில் முக்கியமானது மக்கள் தொகைக் கட்டமைப்பாகும். ஒப்பீட்டளவில் என்றைக்குமே சிங்கள தேசிய இனத்தின் எண்ணிக்கையினை நெருங்க முடியாத பாரிய இடைவெளியினைக் கொண்டுள்ள ஈழத்தமிழ் மக்கள் தொடர்ந்து வந்த யுத்தம், நெருக்கடி, வாழ்வியல் மாற்றங்கள் காரணமாக எதிர் மறையான வளர்ச்சிகொண்ட மக்கள் கூட்ட மாக கரைந்து கொண்டிருக்கின்றனர்.

எல்லைகளால் வரையறுக்கப்பட்ட தனி நாட்டினுள் அல்லது ஒரு தீவினுள் வாழ்பவர்கள் அவ்வாறு எதிர்மறைப் போக்கினை கொண்டிருந்தால் அதுஉடனடியான பாதிப்பினை அவர்களுக்கு ஏற்படுத்த மாட்டாது. ஆனால், இலங்கைத் தீவினுள் 70%இற்கும் அதிகமான சனத்தொகையினைக் கொண்ட சிங்கள மக்கள் தொகுதியுடனும், கூடிய மக்கள் தொகைவளர்ச்சி வீதத்தினை தொடர்சியாகத் தக்கவைத்துக்கொண்டிருக்கும் முஸ்லிம்மக்களுடனும் நிலத்திற்காகவும் வளத்திற்காகவும் வாய்ப்புகளுக்காகவும் அரசியல் உரிமைக்காகவும் போட்டியிடுதல் என்பது மிகவும் கடினமான இலக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்; தமிழக மீனவர்கள் 23 பேர் கைது

**நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 23 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து 5 படகுகளை பறித்துக் கொண்டதாக இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 2 ஆம் திகதி சுமார் 700 விசைப் படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.**

இவர்கள் தலைமன்னார், நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது தலைமன்னார் கடல் பகுதியில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீன்பிடிக்க விடாமல் விரட்டினர்.

அத்துடன் சொந்தமான 5 படகுகளையும் இலங்கை கடற்படையினர் இரவில் சிறை பிடித்து தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றதாகவும் பின்னர் 23 பேரையும் தலைமன்னார் பொலிஸாரிடம் இலங்கை கடற்படையினர் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து மீனவர்கள் 23 பேர் மீதும் எல்லைதாண்டி வந்ததாக வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மீனவர்கள் அனைவரையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் இராமேஸ்வரம் மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

## மஹோற்சவம்

(சிவநகர்)

உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள சக்திபுரம் வள்ளி தேவசேனா சமேத முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடை பெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும் நடைபெற்று ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை சமயச்சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-3-254)

# வாக்காளர் அட்டை விநியோகம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபை தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) எம்.எம்.மொஹம்மட் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் விரைவில் தபால் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபை தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் அவை வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிவரை இவ்வாறு வாக்காளர் அட்டைகள் தபால் அலுவலகங்களின் ஊடாக விநியோகிக்கப்படும். குறிப்பாக ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வாக்காளர் அட்டை விநியோகிக் கப்படும் விசேட தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கிழக்கு வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் ஏழு மாவட்டங்களை சேர்ந்த 33 இலட்சத்து 36 ஆயிரத்து 915 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் 2011 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் படி நடைபெறவுள்ளது.(அ-9)

# திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## அமைக்க அரசு ஏற்பாடு

(கொழும்பு)

திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகாரச்சபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த மத்திய நிலையத்தை கற்பிட்டியில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் கதிரியக்க அனர்த்தங்கள் ஏற்படின் அதிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அணு தொடர்பான அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தற்போது அணு தொழில்நுட்பம், மின் உற்பத்தி மாத்திரமின்றி விவசாயம், மருத்துவம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அணு தொழில் நுட்பத்தின் பயன்பாடு மேலும் அதிகரிக்கப்படுவதால் இலங்கையில் திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது முக்கியத்துவம் வாய்ந்ததென அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# இலங்கை விவகாரங்களில் தலையிட தமிழகத்திற்கு உரிமை கிடையாது

## கே.பி. கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் தமிழகம் தலையீடு செய்யக்கூடாது என தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளராக முன்னர் செயற்பட்டிருந்த குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்யும் உரிமை தமிழகத்திற்கு கிடையாது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி உள்ளிட்ட பல தமிழக அரசியல்வாதிகள் வாக்குகளை குவிக்கும்நோக்கில் இலங்கை விவகாரம் பற்றி பேசி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்ச்சி திட்டங்களை அறியாத அப்பாவி பொதுமக்கள் இந்த அரசியல்வாதிகளின் கருத்துக்களை உண்மை என நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை பயன்படுத்தி தங்களது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளும் திட்டமானது துரதிர்ஷ்டவசமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தமிழர்கள் ஐக்கிய நாட்டுக்குள் வாழ விரும்பும் சந்தர்ப்பத்தில் தமிழக அரசியல்வாதிகள் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைப்பது நகைப்பிற்குரியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு வெளிச்சக்தியும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது என்பதே எனது உறுதியான நம்பிக்கை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக அகதி முகாம்களில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வாழ்ந்து வரும் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தமிழக அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க முடியமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


தமிழகத்தில் வாழ்ந்து வரும் இலங்கை தமிழர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுகளை வழங்க தமிழக அரசியல்வாதிகள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மாநகரசபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் 2012ஆம் ஆண்டுக்கான ஏழாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபைச் செயலாளர் திருமதி ரு.சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (அ-9)

# சாயி பாபாவின் படத்தில் விபூதி சொரிகின்ற அற்புதம்



மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவில் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் படத்திலிருந்து விபூதி சொரிகின்ற அற்புதம் இடம்பெற்று வருகிறது. விஷ்ணு வித்தியாலய வீதி காரைதீவைச் சேர்ந்த பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் பக்தரான குணசேகரம் என்பவரது வீட்டிலுள்ள சாயி பாபாவின் திருவுருவப் படத்திலிருந்து விபூதி சிறிதளவாக வந்து கொண்டிருக்கின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இது கடந்த நான்கு தினங்களாக மேல் வரிசையிலுள்ள திருவுருவப்படத்திலிருந்து விபூதி தோன்றி நேர் கீழேயுள்ள மற்றைய ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் படத்தில் வீழ்ந்து சுவாமியின் திருவுருவப்படத்தின் காலடியில் குவிந்த வண்ணம் உள்ளது. (அ-2)

# 3 ஆயிரத்து 934 பேர் கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றனர்

தென்கொரியாவில் தொழில் வாய்ப்புக்கள் வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மூவாயிரத்து 934 பேர் பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு கொரிய மொழிப் பரீட்சையில் சித்திபெற்ற இரண்டாயிரத்து 460 பேர் இதில் அடங்குவதாக பணியகம் தெரிவிக்கின்றது. அத்துடன் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கொரிய பரீட்சையில் சித்தி பெற்ற 474 பேருக்கு இம்முறை கொரியாவில் வேலை வாய்ப்புக்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முறை நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையில் ஒன்பதாயிரத்து 998 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது. அவர்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் கொரிய வேலைவாய்ப்பிற்காக தெரிவு செய்யப்படும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் ஏழாயிரத்து 411 பேர் தென்கொரியாவில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண வைத்தியர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்பு

வடமாகாண வைத்தியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின்செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமானது யாழ்.போதனா வைத்தியசாலை அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பிலான விசாரணைகளில் அதிருப்தி கொண்டுள்ளது. பூர்வாங்க விசாரணைகளில் பரிந்துரை செய்யப்பட்டதன் பிரகாரம் மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்விசாரணைகள் பாரபட்சமின்றி நீதியான முறையில் உடனடியாக நடத்தப்பட வேண்டும். மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி எமது சங்கத்தின் வடமாகாண வைத்தியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எனினும் அவசரநோயாளர்சேவைகளில் எதுவித தடையும் ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாண சபைகள் பயிற்சிப்பட்டறைகளா?

## ஜே.வி.பி.கேள்வி

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் கட்சியினரின் அடுத்த தலைமுறையினருக்கு பயிற்சிப் பட்டறையாக மாகாண சபைகள் அமைந்துள்ளன என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்பு மனுக்கள் வழங்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பகிரங்கமாக அறிவித்திருந்தது.

எனினும் இந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் எட்டு ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்கள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்கவின் மகன் சமில திசாநாயக்க, தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சர் ஜகத் பாலசூரியவின் மகன் தாரக பாலசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜீ. பத்மசிறியின் மகள் வை.ஜீ.ஜனதாரி ஆகியோருக்கு சப்ரகமுவ மாகாண சபைக்கான ஆளும் கட்சி வேட்பு மனு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களை ஏமாற்றி உறவினர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து வருகின்றது. அரசாங்கம் ஜனநாயக விரோத செயல்களிலேயே ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# போதைக்காக டெமடோல் மருந்தை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள்

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர் உள்ளிட்ட ஏராளமானோர் டெமடோல் என்ற மருந்தை போதைக்காக பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மருந்தை வைத்தியரின் பரிந்துரையின்றி சாதாரண மருந்தகங்களில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இதனையடுத்து கொழும்பு, மருதானை, மாலபே பிரதேங்களில் மேற்கொண்ட தேடுதல்களில் மருந்தகங்களில் இருந்து சுமார் 6 இலட்சம் மருந்துகள் கைப்பற்றப்பட்டன என்று சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மருந்து கம்பஹா பிரதேசத்திலும் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. அத்துடன் இந்த விற்பனையை நாடு முழுவதும் வியாபிக்க சில தரப்பினர் திட்டமிட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது எனவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த டெமடோல் மருந்தைத் தவிர இருமலுக்கு நிவாரணியாக உட்கொள்ளப்படும் பாணி வகையொன்றையும் மாணவர் உள்ளிட்ட இளைஞர்கள் போதைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான மருந்துகளை மருத்துவரின் பரிந்துரையின்றி விற்பனை செய்யும் மருந்தகங்களின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

மருத்துவரின் பரிந்துரையின்றி இவ்வாறான மருந்துகளை பயன்படுத்துவதால் ஈரல் நோய்கள் உள்ளிட்ட நோய்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வடமாகாணத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட உளவளத்துணை ஆசிரியர்களுக்கான சகபாடி ஆதரவு குழுக் கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக முதல்நிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 12 வலயங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட உளவளத்துணை ஆசிரியர்களை கலந்துரையாடலில் பங்குபற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு சகல வலயக்கல்வி பணிப்பாளர்களையும் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (அ-3-266)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.07 24

★ 1505-போர்த்துக்கீச நாடுகாண் பயணிகள் இந்தியாவுக்கு செல்லும் வழியில் கிழக்கு ஆபிரிக்காவில் கில்வா என்ற இடத்தைத் தாக்கி அதன் மன்னனை திறை செலுத்தாத காரணத்துக்காக கொன்றனர்.

★ 1567-ஸ்கொட்லாந்தின் முதலாம் மேரி பதவியில் இருந்து அகற்றப்பட்டாள். அவளது ஒரு வயது மகன் ஜேம்ஜ் மன்னனாக்கப்பட்டான்.

★ 1915-சிக்காகோவில் ஈஸ்ட்லாண்ட் என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 845 பேர் உயிரிழந்தனர்.

★ 1923-கிரேக்கம், பல்கேரியா மற்றும் முதலாம் உலகப் போரில் பங்குபற்றிய நாடுகள் சுவிட்சர்லாந்தில் கூடி புதிய துருக்கியின் எல்லைகளை நிர்ணயிக்கும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

★ 1924-பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு (FIDE) பாரிசில் அமைக்கப்பட்டது.

★ 1931-பென்சில்வேனியாவில் முதியோர் இல்லம் ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 48 பேர் உயிழந்தனர்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய, கனேடி விமானங்கள் ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகரில் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தன. நவம்பர் மாத இறுதி வரை இடம்பெற்ற இத்தாக்குதல்களில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1969-அப்பல்லோ 11 பாதுகாப்பாக பசுபிச் கடலில் இறங்கியது.

★ 1974-சைப்பிரசில் துருக்கியரின் படையெடுப்பின் பின்னர் சைப்பிரசின் இராணுவ அரசு கவிழ்க்கப்பட்டு நாட்டில் மக்களாட்சி மீளமைக்கப்பட்டது.

★ 1977-லிபியாவுக்கும் எகிப்துக்கும் இடையே இடம்பெற்ற 4 நாட்கள் போர் முடிவுக்கு வந்தது.

★ 1982-ஜப்பானில் நாகசாகியில் பெரும் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 299 பேர் உயிரிழந்தனர்.

★ 1991-இந்திய அரசு தனது புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது.

★ 2007-லிபியாவில் 400 இற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு எச்.ஐ.வி.கிருமிகளைப் பரப்பியதாக எழுந்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 பல்கேரியத் தாதிகளையும் பாலஸ்தீன மருத்துவர் ஒருவரையும் லிபிய அரசு விடுதலை செய்தது.

### பிறப்புகள்

★ 1802-அலெக்சாந்தர் டுமாஸ், பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1870)


★ 1932-தாமரைத் தீவான், ஈழத்து எழுத்தாளர்

★ 1953-ஸ்ரீவித்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ.2006)

### ஸ்ரீவித்தியா



புகழ்பெற்ற தென்னிந்தியத் திரைப்பட நடிகை ஆவார். கர்நாடக இசை பாடகி எம்.எல். வசந்தகுமாரியின் மகள். இவர் 1970 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டின் தொடக்கம் வரை நடித்து வந்தார். 2003 ஆம் ஆண்டு மார்புப் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட அவர் 2006 ஒக்டோபர் 19 ஆம் திகதி இறந்தார். மேலும் தமிழ், அபூர்வ ராகங்கள், காதலுக்கு மரியாதை, நம்பிக்கை நட்சத்திரம் போன்ற முன்னணிப் படங்களில் நடித்துள்ளார்.



### தாமரைத்தீவான்

திருகோணமலையின் தென்கிழக்கிலே 12 மைல் தொலைவில் உள்ள தாமரைவில் என்ற பழந்தமிழ்ச் சிற்றூரில் சோமநாதர்- முத்துப்பிள்ளை தம்பதியினருக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர் தாமரைத்தீவான். தனது ஆரம்பக் கல்வியை தாமரைவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் பயின்றவர். பின்னர் மூன்றாம் தரத்திலிருந்து மூதூரில் தங்கியிருந்து அங்குள்ள மூதூர் அர்ச் அந்தோனியார் பாடசாலையில் கல்வி பயின்றார்.

1952 இல் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் படித்து பயிற்சி பெற்ற ஆசிரியரானார்.

ஆசிரியராகப்பணியாற்றியதுடன் 1972 முதல் 1987 இல் ஓய்வு பெறும் வரையில் அதிபராகப் பணியாற்றினார்.


இளம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1956 இல் சுதந்திரன் பத்திரிகையில் இவரது முதலாவது கவிதை பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளிலும் சுடர், தமிழ் உலகம், சர்வதேச தமிழர் முதலிய சஞ்சிகைளிலும் எழுதினார். திருமலை மாவட்டத்தில் பல கவியரங்குகளில் கவிதை பாடி சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் அறியப்பட்டார்.

#### வெளிவந்த கவிதைத் தொகுப்புகள்

இவர் பிள்ளைமொழி, கீறல்கள், கட்டுரைப் பத்து, போரும் பெயர்வும், ஐம்பாலைம்பது, வள்ளுவர் அந்தாதி, சிறு விருந்து, சோமம், என்பா நூறு, உணர்-உரை போன்ற கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டார். மேலும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் படைத்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்திய தமிழ் இலக்கிய விழாவில் தாமரைத்தீவான் ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சு 2005 ஆம் ஆண்டில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு நேற்றுக்காலை 8.30 மணியளவில் சட்டநாதர் வீதியிலுள்ள வேல்முருகன் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதில் சிறிய தேரில் கொடிச்சீலை வைக்கப்பட்டு பக்தர்களால் தேர் இழுக்கப்பட்டு வருவதையும் கொடிச்சீலை முறைப்படி ஆலயத்தினுள்ளே கொண்டு செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- உ.சாளீன்)

# காணாமற்போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்க படைத்தரப்பு முனைப்புக்காட்டுகிறது

## அவர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியது யார்? நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் கேள்வி

(யாழ்ப்பாணம்)

**காணாமற்போனவர்கள் இறந்து விட்டதாகக் கூறி இராணுவம் மரணச்சான்றிதழ் கொடுக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. இந்த அதிகாரத்தினை இராணுவத்திற்கு யார் கொடுத்தது. மரணச் சான்றிதழ் கொடுக்க இராணுவம் யார்? என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனவர்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் அவர்களின் உறவினர்களை அழைத்து விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விபரங்களை இராணுவத்தினர் பொலிஸாரின் ஊடாக சேகரித்ததோடு காரணம் கேட்டவர்களுக்கு உங்கள் உறவினர்கள் இறந்து விட்டனர். மரணச் சான்றிதழ் வழங்கப் போகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர்களினால் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்தான் இந்தக் காணாமற்போனவர்களில் அதிகமானவர்கள்.

இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் தொடர்பில் தகவல் வழங்கப்பட வேண்டும் என சர்வதேச நாடுகளினால் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் இராணுவம் மரணச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது கண்டிக்கப்பட வேண்டியது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் காணாமற்போனவர்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் காணாமற்போனவர்கள் இறந்துவிட்டதாகக் கூறி மரணச் சான்றிதழ் வழங்க இராணுவம் முனைப்புக் காட்டுவதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

இதுதவிர வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்தும் பெறப்பட்டுள்ளது. மேலும் மரணச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் இராணுவத்திற்கு உண்டா? சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்துள்ளது என்பதனை மரணச்சான்றிதழ் கொடுக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 30 பேருக்கு மேல் அழைக்கப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

காணாமற்போனவர்கள் எப்படி மரணமடைந்தனர் என்பது தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். சர்வதேச சமூகம் காணாமற்போனவர்கள் தொடர்பில் அதிக அக்கறையுடன் இருக்கும் தருணத்தில் இராணுவம் மரணச்சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. மேலும் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோது விசாரணைகளைத் தீவிரப்படுத்துவதாக கூறிய இலங்கை அரசாங்கம் தற்போது அவர்களை பூசா முகாமிற்கு மாற்றப்போவதாக கூறியிருப்பது ஏற்கக் கூடிய ஒன்றல்ல.

உறவினர்கள், சட்டத்தரணிகளுடன் உள்ள தொடர்பை துண்டிக்கும் வகையில் அரசியல் கைதிகளை பூசா முகாமிற்கு மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே, அரசியல் கைதிகளை புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்ற வேண்டும் அல்லது வடக்கு கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்ற வேண்டும். மாறாக பூசா முகாமிற்கு மாற்றி அவர்களை இம்சைப்படுத்தாதீர்கள் என அரசாங்கத்திடம் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்தோடு அரசியல் கைதிகளை பூசா முகாமிற்கு மாற்றுவது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு முரணானது.

அடித்துக் கொலை செய்யப்பட்ட நிமலரூபனின் சடலம் இறுதிக் கிரிகைக்காக அவரது வீட்டுக்கு கொண்டு வரப்படவுள்ள நிலையில் அவரது வீட்டினை இராணுவம் முற்றுகையிட்டுள்ளது.

நிமலரூபனின் இறுதிச் சடங்கில் தாமும் பங்கு கொள்வதாக வெளியுலகிற்கு காட்டி அந்த வீட்டினையும் காணிகளையும் துப்பரவு செய்யும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இதனால் இறந்த கைதி நிமலரூபனின் இறுதிச் சடங்கில் கூட அவரது உறவினர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மரணச் சடங்கைக்கூட சுதந்திரமாக செய்ய முடியாத நிலையில் இராணுவத் தலையீடு அதிகரித்துள்ளது.

மேலும் யாழ்.கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் அரசியல்வாதிகள் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அரசியல்வாதிகள் என்ன செய்கின்றனர் என்று இராணுவம் கேட்க முடியாது. இராணுவம்தன்னுடையவேலையைப்பார்க்கவேண்டும்.

அரசியல்வாதிகளிடம் மக்கள் கேட்கட்டும்.. இராணுவம் கேட்க முடியாது. பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கினால் நாமும் வீடு கட்டிக்கொடுப்போம். எனவே, இராணுவம் பாதுகாப்பு வழங்க வந்தால் அதை மட்டும் செய்யட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# ஒற்றுமையை வலியுறுத்தி வவுனியாவில் நடைபவனி

(பூந்தோட்டம்)

சோசலிச இளைஞர் சங்கமானது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி வவுனியா புகையிரத நிலையத்தில் இருந்து நகரசபை மைதானம் வரை நடைபவனியை மேற்கொண்டிருந்தனர்.

கொழும்பில் இருந்து புகையிரதத்தில் வருகை தந்திருந்த இளைஞர் சங்கத்தின் பிரதிநிதிகள் புகையிரத நிலையத்தில் வைத்து கோசங்களை எழுப்பியிருந்ததுடன் சகோதரத்துவத்தை வலியுறுத்திய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதனை அடுத்து நகர வீதி வழியாக நடைபவனியாக சென்ற இவர்கள் வடக்கு மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் சிக்குண்டிருப்பதாக சித்திரித்து ஊர்தியொன்றினையும் கொண்டு சென்றனர்.

ஏற்கனவே வவுனியா பொலிஸார் இந்த நடை பவனிக்கு நீதிமன்ற தடையுத்தரவை பெற்றிருந்த போதிலும் நேற்று காலை சோசலிச இளைஞர் சங்கத்தின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தை நாடி இத் தடையுத்தரவை நிறுத்தியிருந்த நிலையில் இந்நடைபவனி இடம்பெற்றிருந்தது.

இதன்போது பெருமளவான பொலிஸார் நகரம் எங்கும் குவிக்கப்பட்டிருந்ததுடன் புகையிரத நிலையத்திற்கு முன்னால் கலகத் தடுப்பு பொலிஸாரும் காணப்பட்டனர். (அ-2-266)

# நீதிமன்ற கட்டமைப்பில்கூட சுயாதீனத்தன்மை கிடையாது

## சரத் பொன்சேகா வருத்தம்

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்கு இடையில் பிளவினை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.வரலாற்றை திருத்தி எழுதுமாறு சில பௌத்த பிக்குகளை ஊக்கப்படுத்தி வருகின்றனர். இதனால் பௌத்த பிக்குகளுக்கு இடையில் பிளவு ஏற்படக்கூடும்.

நேர்மையானதும் வலுவானதுமான ஓர் எதிர்க்கட்சியை உருவாக்குவதே தமது இலக்கு. இந்த அரசாங்கம் வெளிநாடுகளிடம் கையேந்தி வருகின்றது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். இலங்கையில் தற்போது நீதிமன்ற கட்டமைப்பில் கூட சுயாதீனத்தன்மை கிடையாது.

நீதவான்களையும் சட்டமா அதிபர் மற்றும் திணைக்கள அதிகாரிகளையும் ஜனாதிபதியே நியமிக்கின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்

(கொழும்பு)


வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இலங்கையை ஆசியாவின் கல்வி மையமாக பிரபல்யப்படுத்தும் நோக்கில் இவ்வாறு 100 வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

சுமார் 48 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. புலமைப்பரிசில் வழங்கப்படும் குறித்த மாணவர்களுக்கு விசா கட்டணங்கள் வழங்கப்படமாட்டாது.

வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் நோக்கில் அரசாங்கம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நல்லூரான் திருவடிக்கு இன்று கொடியேற்றம்



### சாந்தி சமாதானம் சர்வமெங்கும் நிலவ சங்கரனார் மைந்தா கொடியேறு

ஆறுமலை அழகனே அகிலாண்ட நாதனே
சண்முகா கொடியேறு
ஆறுமுக ராஜனே அட்சர வினோதனே
சரவணபவ கொடியேறு
காவடிகள் ஆடிடவே கற்றவர்கள் பாடிடவே
கந்தவேளே கொடியேறு
சேவற்கொடியும் சித்திரவேலும் விண்ணொளி வீச
கார்த்திகேயா கொடியேறு
சிங்கார மயிலேறும் பெருமானெம் குருநாதா
சிவசுப்பிரமணியனே கொடியேறு
சாந்தி சமாதானம் சர்வமெங்கும் நிலவ
சங்கரனார் மைந்தா கொடியேறு

*க. லோகேஸ்வரன், தொல்புரத்தூர்*

### ஆறுதலை முருகா எமக்கு ஆறுதலைத் தந்தருள்வாய்

நல்லைக்கந்தனுக்கு கொடியேற்றம்
நானிலம் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளம்

எல்லைகள் அற்ற அருள் தரும் எங்கள்
ஏற்றம் பெற்ற முருகனுக்கு கொடியேற்றம்

தொல்லைகள் நீக்கி அருள் தருவான் – எங்கள்
தொன்மை மிகு குறிஞ்சிக் குமரனுக்கு கொடியேற்றம்

தேவர்களைக்காக்க போர் செய்த – எங்கள்
தேவசேனாதிபதிக்கு கொடியேற்றம்

குற்றங்கள் களைந்து வரம் அளிக்கும்– எங்கள்
குஞ்சரி வள்ளி மணாளனுக்கு கொடியேற்றம்

ஆறுதலை கொண்ட ஆறுமுகன்– எங்களுக்கு
ஆறுதலைத் தர கொடியேற்றம்

*செ. தர்மலிங்கம்*
*நாயன்மார்கட்டு*

### தொல்லைகள் போக்கிட கொடியேறுது

கொடியேறுது நல்லையில் கொடியேறுது
தில்லையின் மைந்தனுக்கு கொடியேறுது
தொல்லைகள் போக்கிடவே கொடியேறுது
துன்பங்கள் தீர்த்திடவே கொடியேறுது
எல்லையில்லா இன்பந்தரக் கொடியேறுது
எண்ணங்கள் நிறைவேறக் கொடியேறுது
புள்ளி மயில் வாகனனுக்கு கொடியேறுது
வள்ளி மணாளனுக்கு கொடியேறுது

*வேலனடியாள்*
*திருமதி. த. தயாபரன்*
*நல்லூர்*

### அருட்கடாட்சம் தாருமையா

ஆறுமுகம் கொண்டவனே ஆனைமுகன் சோதரனே
வல்வினைகள் போக்கிடவே வந்திடுவாய் வீதிவலம்
பிணியகற்றி நல்வாழ்வு உவந்திடவே
வள்ளி தெய்வானையுடன் கொடியதனையேற்றி
அருட்கடாட்சம் தாருமையா நல்லை நாயகனே

*த. தனுஷ்யா*
*நவாலி*

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தினையொட்டி நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து 25 நாட்கள் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மாணிக்கராஜ சர்மா அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மங்கள இசையும் நடைபெறும். இன்று கந்தனுக்கு மூத்த கணபதி எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மாவின் சிறப்பு சொற்பொழிவும் மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, மாதகர் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

---

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலங்களில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து 25 நாட்கள் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் கலாநிதி ஆறு திருமுருகனின் ஆசியுரையைத் தொடர்ந்து மங்கல இசை நடைபெறுமென இளங்கலைஞர் மன்ற நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-9)

---

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் வடக்கு வீதி மகேஸ்வரன் மணிமண்டபத்தில் விநாயகர் உணர்த்தும் வாழ்வி [illegible] ஆன்மீக [illegible] சைவப் புலவர் நவராஜ் ஆற்றுவார். (அ-9)

## நல்லூரிலுன் கொடியேற்றம்

வேதனைகள் விலகவில்லை வேலாநீ அறியாயோ
வளராதோ மலராதோ ஆறுதலிங்கு
சோதனைகள் சேர்வதனை சேந்தாநீ அறியாயோ
சாட்சிக்கு வாராதோ சத்தியமிங்கு
நாதனே முருகா நல்லூரிலுன் கொடியேற்றம்
நன்றே கண்டின்று வேண்டுகின்றோம்
பாதகங்கள் இறந்திடவும் பண்பமைதி பிறந்திடவும்
பேரருள் புரிவாய் பெருமானே!

*க. அருமைநாயகம்*
*குளப்பிட்டி*

### சேவற்கொடி ஏறுது நல்லூரில்!

சிவமரம் கட்டிய சக்திக் கயிற்றில்
சிவப்புக் கொடித்துணி ஆவி
பவநெறிப் பாசமாம் தருப்பை நாரினால்
பார்வையில் சுற்றியே கட்டும்
உவப்பினில் திருவிழாக் கொடி மரம் இதனை
உலகமே உணர்ந்தருள் போற்றும்
சிவமணம் பரப்பும் செந்தில்வேல் குமரா!
சேவற்கொடி ஏறுதே நல்லூரிலே!

*புலவர் செ. பரமநாதன்*
*மண்டைதீவு*

### குருநாதன் தாள் பணிந்தேன்

குறுநகையும் குடியிருக்கும் குமரன் முகம் ஓராறும்
குன்றெனவே குவிந்திருக்கும் குகன் புயங்கள் ஈராறும்
கறுமமெலாம் தீர்த்துவிடும் கருணைமழை விழிபெய்யும்
கமலம் நிகர்ப் பாதமதிற் சிலம்புநகை ஒலி செய்யும்
நறுமணமும் கமழுகின்ற நல்லமலர் மாலைகளால்
நல்லையிலே வாழ்பவனின் திருக்கழுத்திற் தேனூறும்
உறுதுணையாய் அடியவர்க்கு இருக்குமவன் அருட்பதியிற்
கொடியேறும் பெருநாளிற் குருநாதன் தாள் பணிந்தேன்

*சி. சிவபாலன்*
*மன்னார்*

### இன்றுனது மாகொடியை ஏற்று!

தாயகத்தில் தண்டமிழர் தக்க உரிமைபெற்(று)
ஆய பலவுயர்வு காணவருள் – நேயமொடு
வள்ளி தெய்வ யானை மகிழ்கோவே நல்லூரா
பள்ளியெழுந்(து) உன்கொடியை ஏற்று
மண்ணில் தமிழ்ப் பண்பு மாயாமல் போற்றிடவும்
கண்ணான சைவம் காத்திடவும்– சண்முகனே
நன்முறையில் உன்னடியார் நாளெல்லாம் நாடிவர
இன்றுனது மாகொடியை ஏற்று

*ச. லலீசன்*
**விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

### கொடியேற்றக் கோலாகலனே

கந்தா கடம்பா கார்த்திகேயா
கொடியேற்ற கோலாகலம் காண்பவனே
குந்தகம் விளையாத குவலயமாக
எந்நாளில் விடியல் காணும்
அந்தர வாழ்வும் அந்திசந்தி
அறியாச் சாவுமென மனிதயினம்
நொந்து நொடிந்து நித்தம்
நையல் படுவது நோக்காயோ
செந்தூரா சூர சங்காரா
தீயவை தீய்க்கும் சக்திவேலுடன்
வந்திடாயோ வெங்கொடுமை வேரறுத்து
வாழவோர் நல்யுகம் படைத்திடாயோ

**சி. சிவநேசன்**
**அல்வாயூர்**






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாலங்களைக் கட்டுவதற்குப் பதில் சுவர்களை அமைத்து விடுவதால் பல மனிதர்கள் தனித்து விடப்படுகின்றனர். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மதகுருமார் எப்படி இருக்க வேண்டும்?

அன்பே சிவம் என்கிறது சைவ சமயம். உன்னைப்போல் பிறரையும் நேசி என்கிறது கத்தோலிக்கம். பிற உயிருக்கு இம்சை செய்யாதே என்று பௌத்தம் மொழிகிறது. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று இறைவனைப் பெருமைபடுத்துகிறது இஸ்லாம்.

இப்படியாக எல்லா சமயங்களும் நல்லதைப் போதிக்கின்றதாயினும் சமயக்கருத்துக்கள் மக்களைச் சென்றடையவில்லை.

மாறாக மதவாதமே எஞ்சி மற்றவர்களின் தலையைக் கொய்வதற்கு கங்கணம் கட்டி நிற்கிறது.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் என்ன? மக்களைத்தவிர பெரும்பாலான மத குருமாருக்கு இறை நம்பிக்கை இல்லாமையே ஆகும்.

இத்தகைய மதகுருமார் கோல உடை தரித்ததெல்லாம் மனித இரத்தத்தை இந்த மண்ணிற்கு தாரைவார்க்கவன்றி வேறெதுவும் இல்லை.

அண்மையில் கூட ஒரு மதகுருவை பாடசாலை அதிபர் ஒருவர் சந்திக்க நேரிட்டது.

மதகுரு என்பதற்கு அந்த அதிபர் உரியமதிப்பை செலுத்தினார். குறித்த மதகுருவோ தனது காரியத்தில் மட்டுமே கண்ணாயிருந்தார்.

அதிபர் கூறிய எந்த விடயத்தையும் அவர் கேட்டதாக இல்லை. தனது காரியத்தை நிறைவேற்றுவதற்கு அதிபரின் உதவியைப்பெற்ற பிரஸ்தாப மதகுரு, அதிபரை மட்டுமல்ல; அந்த ஊரில் உள்ள ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்த மக்களையே ஏமாற்றித் துரோகம் செய்துவிட்டார்.

இப்போது அந்தப் பகுதியில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துவிட்டது.

மோட்டார் சைக்கிள்களில் வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் நடமாட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

எந்தநேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையில், அங்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

கண்ணுக்கு முன்னாக ஒரு மதகுரு மதவெறி பிடித்து அந்த ஊரில் மதச் சண்டையை ஏற்படுத்த அதிதீவிரம் காட்டிவருகிறார்.

என்ன செய்வது! எந்த அநீதி இழைத்தாலும் கோல உடை அவர்களைப் பாதுகாத்துக்கொள்கிறது.

இப்படியான மதகுருமார் தாமும் நரகத்திற்குச் சென்று மற்றவர்களுக்கும் நரகம் செல்லும் பாதையைக் காட்டி நிற்கின்றனர்.

உண்மையான மதகுரு தெய்வம் போன்றவர். அவரின் ஒவ்வொரு செயலும் மக்களை நல்வழிப்படுத்துவது. அவர்களுக்கு நல்லதை எடுத்துக் கூறுவது. இனம், மதம், மொழி என்ற பேதம் மறந்து 'மனிதன்' என்று நோக்குவது. இதைத்தான் மதகுருமாரிடம் எல்லாச் சமயங்களும் எதிர்பார்க்கின்றன.

ஆனால் அப்படி எதுவுமில்லை. ஓ! இறைவா இவர்களை மன்னித்தருளும். இவர்களின் ஆழ் மனங்களில் தேங்கிக்கிடக்கும் மதப் பேயை இல்லாது செய்ய உதவி புரியும். இத்தகையவர்களின் சகவாசம் கிடைக்காதிருக்க அருள்புரியும்.

# நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்துவது மஹிந்த சிந்தனையின் நோக்கமா?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்துவதா மஹிந்த சிந்தனையின் நோக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறுவர்கள், பெண்கள் வீதியில் தனியாக செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மன்னராட்சி காலங்களில் பெண்கள் தங்க ஆபரணங்களை அணிந்து நாடு முழுவதிலும் செல்ல முடிந்தது.

தெல்கந்தவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய மன்னராட்சிக்காலத்தில் பெண்கள் ஆபரணங்களை அணிந்து அரை மைல் கூட தனியாக செல்ல முடியாது. சிறுவர் துஷ்பிரயோகம், பெண் கள் மீதான பாலியல் வன்முறைகள் மற்றும் கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

மன்னாரில் அண்மையில் துரதிர்ஷ்டவசமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. ஆளும் கட்சி அமைச்சர் நீதவானை மிரட்டி சாதகமான தீர்ப்பை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

குறித்த அமைச்சரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். நாட்டில் இடம்பெற்ற வரும் அநீதிகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# அமைச்சர் ரிசாத்துக்கு எதிராக சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கல்

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

அமைச்சரை பாதுகாக்க ராஜபக்ஷ குடும்பம் பாரிய முயற்சிகளை எடுத்து வருவதாகவும் சட்டத்தரணிகள், நீதிபதிகள், அரசாங்கத்தை விமர்சிப்பதே இதற்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சிகள் இல்லை எனத் தெரிவித்து அமைச்சரைப் பாதுகாக்க பொலிஸார் முயற்சித்து வரும் நிலையில் இது மதபேதத்தை ஏற்படுத்தும் பிரச்சினை எனவும் புலிகள் இயக்கத்தைப் பிரச்சினையில் இழுத்துப் போடவும் அமைச்சர் ரிசாத் அரச ஊடகங்களைப் பயன்படுத்தி முயற்சித்து வருகிறார். மேலும் அமைச்சரைப் பாதுகாக்க ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் தலையிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அமைச்சரவையில் உள்ள உறுப்பினர் ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளமை கவலையளிப்பதாக கன்னொருவையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி கூறியுள்ளமை அமைச்சரைப் பாதுகாக்க ஜனாதிபதி முயற்சிப்பதை வெளிப்படுத்துகின்றது.

வரலாற்றில் நீதிபதிகள் வீட்டுக்கு கல் எறிந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதலை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்.

அரசாங்கத்திற்காக அம்மணமாக இருந்து எந்தவொரு இழிவான செயலையும் செய்யும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான அசிங்க ஊடகவியலாளர் ஹட்சன் சமரசிங்கவிற்கு எதிராகவும் சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகின்றது. மன்னார் நீதவானை புலி என ஹட்சன் சமர சிங்க பகிரங்கமாக தெரி வித்துள்ளார். மேலும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றுக்கு சேறு பூசும் வகையிலான நிகழ்ச்சியை ஒலிபரப்பியமை குறிப் பிடத்தக்கது. (அ-2)

# வயாவிளான் யாகப்பருக்கு கிடைத்தது விமோசனம்

## திருவிழாவுக்கு படைதரப்பு அனுமதி

வயாவிளான் யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கு பலாலி பாது காப்பு பிரிவினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

யாழ்.மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், வயாவிளான் ஆலயப் பங்குத்தந்தை அன்ரனிபாலா ஆகியோரின் முயற்சியால் மேற்படி அனுமதி பெறப்பட்டு இவ்வருடம் சிறப்பாக திருவிழாவை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் வசதி கருதி பயண ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

புனித சாள்ஸ் மகாவித்தியாலய முன்றல், கோப்பாய் மாதா கோவில் முன்றல், பருத்தித்துறை அந்தோனியார் கோவில் முன்றல் ஆகிய இடங்களி லிருந்து காலை 8 மணிக்கு விசேட பேருந்துகள் புறப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய அருட்பணி சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3-51)

# போலி நகை அடகு வைத்தவர்கள் கைது

வங்கியில் காணப்படுகின்ற உயர் தொழில்நுட்பத்தாலும் கண்டு பிடிக்க முடியாத போலியான தங்க நகைகளை அடகு வைத்து பெருமளவு பணத்தை பெற்று வந்த குழு ஒன்றின் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹற்றன் பிரதேசத்தில் கைதான இந்தக்குழுவில் இரண்டு பெண்களும் ஒரு ஆணும் அடங்கியுள்ளனர்.

இந்தக்குழுவினர் நாடளாவிய ரீதியில் இந்தநடவடிக்கையைமேற்கொண்டு வந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. ஏற்கெனவே ஹற்றன் பிரதேசத்தில் இந்தக் குழுவினர் சுமார் 4 நகை அடகு பிடிக்கும் இடங்களில் போலியான நகைகளுக்கு சுமார் 12 இலட்சம் ரூபாயை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அவர்கள் போலியான தங்க நகைகளை வைத்து சுமார் 80 ஆயிரம் ரூபாயைப் பெற முயற்சித்த போது கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் கொழும்பு மருதானை பிரதேசத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றியமை உட்பட 43 குற்றங்கள் தொடர்பில் வழக்குகளை எதிர்நோக்கி வருபவர் ஆவார். (அ-9)

# பொலிஸ் கான்ஸ்டபிள் மக்களால் நையப்புடைப்பு

மோட்டார் சைக்கிளில் சென்ற யுவதி ஒரு வரின் தங்கச்சங்கிலியினை பறித்தெடுக்க முற்பட்ட முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மடக்கிப்பிடித்த மக்கள் சந்தேக நபரை நையப்புடைத்த சம்பவமொன்று கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யுவதி நேற்று மாலை 5 மணியளவில் காரியாலயத்தில் கடமையினை முடித்துவிட்டு தனது இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் கிராண்ட்பாஸ் பள்ளிவாசலுக்கு சற்றுத் தூரத்தில் வைத்து யூ.எஸ். ரக மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபரே யுவதியின் தங்கச்சங்கிலியைப் பறித்துள்ளார்.

பறித்த சங்கிலியுடன் ஓட முற்பட்ட போது தொழுகையை முடித்து விட்டு வந்தவர்கள் சந்தேகநபரை துரத்திப் பிடித்துள்ளனர். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மதம்



பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக்கணக்கான ஒரேவித மதப்பிரிவுகள் ஆதிக்கத்திற்குப் பாடுபடலாம். ஆனால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தைப் பெறுகின்றன.


ஒரு இலட்சிய மதத்தின் நோக்கம் இந்த வாழ்விற்கும் உதவவேண்டும், மறு உலகிற்கும் வழிகாட்டவேண்டும். அதே வேளையில் மரணத்தை ஏற்க அது ஒருவேளை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

மதத்தைப் பற்றிக்கொண்டு சண்டையில் இறங்காதே. மதச்சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி. தூய்மையும் அறிவும் வெளியேறி இதயம் வறளும்போதே சண்டைகள் தொடங்கும். அதற்கு முன்னால் அல்ல.

கொள்கைகளையோ நம்பிக்கைகளையோ மதப்பிரிவுகளையோ கோயில்களையோ பொருட்படுத்தாதே. ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் சாரமாக அமைகின்ற அறிவுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அவை என்ன? ஒரு மனிதனிடம் இந்த அறிவு முதிரும் அளவிற்கே நன்மை செய்யும் ஆற்றல் அவனிடம் அதிகரிக்கிறது. முதலில் அந்த அறிவைத்தேடிப்பெறு. யாரையும் குறைகூறாதே. ஏனெனில் எல்லாக்கொள்கைகளிலும் முடிவுகளிலும் சிறிதாவது நன்மையுள்ளது. மதம் என்பது கொள்கைகளோ கோட்பாடுகளோ அல்ல. அனுபூதியே மதம். அதை உனது வாழ்க்கையில் காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சம்பியனாக யாழ். மாவட்ட அணி






(வேலணை)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடத்திய மாவட்ட அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டம் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. அபாரமாக ஆடிய யாழ். மாவட்ட அணி 40:07 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் மற்றும் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் அண்ணாத்துரையும் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கினர்.

# சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 286 ஓட்டங்களால் அபார வெற்றி



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி B அணிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான கிரிக்கெட்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி B அணி 286 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்படும் 15 வயதுப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி B அணியினரும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியினரும் மோதிக்கொண்டனர்.நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி B அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி B அணியினர் 47 ஓவர்கள் முடிவில் 325 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.




சென்.ஜோன்ஸ் அணி சார்பாக அதிகபட்சமாக டிலக்சன் 36 ஓட்டங்களையும் எமில்ரன் 32 ஓட்டங்களையும் கருனயன் 29 ஓட்டங்களையும் சோமஸ்கரன் 29 ஓட்டங்களையும் புகழினியன் 27 ஓட்டங்களையும் கிசாந்தன் ஆட்டம் இழக்காமல் 27 ஓட்டங்களையும் கருனியன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் பந்துவீச்சில் லவகீசன் 9 ஓவர்கள் பந்து வீசி 4 விக்கெட்டுக்களையும் விஷ்ணுநதன் 10 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் ஜெயகரன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் சஞ்சீவன் 2 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டினையும் யதுசன் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

326 ஓட்டம் என்ற இமாலய இலக்கினை எட்டினால் வெற்றி என்று பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியினர் 14.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்கள் மாத்திரமே பெற்று 286 ஓட்டங்களால் தோல்வி அடைந்துள்ளனர். துடுப்பாட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் சுவிகரன் 11 ஓட்டங்களையும் லோகதர்சன் 07 ஓட்டத்தினையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கருனயன் 1.5 ஓவர்கள் பந்து வீசி 3 விக்கெட்டுக்களையும் எமில்ரன் 6 ஓவர்கள் பந்து வீசி 3 விக்கெட்டுக்களையும் சோமாஸ்கரன் 3 ஓவர்கள் பந்துவீசி 2 விக்கெட்டுக்களையும் கிசாந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



வடமாகாண தடகளப் போட்டியில் சுழிபுரம் விக்டோறியா கல்லூரி மாணவி பிரணவி பரனிருசிங்கம் 4×100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

# வடமாகாண சம்பியன்களாக யாழ்-மன்னார் அணிகள்






(வேலணை)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் நடத்திய மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.இப்போட்டியில் மன்னார் மாவட்ட அணி 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. பெண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் சிறப்பாக ஆடிய யாழ்.மாவட்ட அணி 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று வடமாகாண சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.இப்போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக வடக்குமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் மற்றும் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் அண்ணாத்துரையும் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி கௌரவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா இனிங்ஸ் வெற்றி


# அம்லா முச்சதம் அடித்து சாதனை



இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்தது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 385 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. அந்த அணியில் குக் 115 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் மோர்னே மோர்க்கெல் சிறப்பாக பந்துவீசி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அதன் பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணியில் அணித்தலைவர் சிமித், அம்லா ஜோடி அபாரமாக ஆடியது.



தனது 100ஆவது டெஸ்டில் சதம் அடித்த சிமித் 131 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய அம்லா முச்சதம் அடித்தார். இதன்மூலம் முச்சதம் அடித்த முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.


தென்னாபிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 637 ஓட்டங்கள் எடுத்து டிக்ளே செய்தது. அப்போது அம்லா 311 ஓட்டங்களுடனும், கலிஸ் 182 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

252 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 115 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பெல் 14 ஓட்டங்களுடனும் போபரா 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந் நிலையில் ஆட்டத்தின் கடைசி மற்றும் 5ஆவது நாள் ஆட்டம் நேற்று நடந்தது. தென்னாபிரிக்காவைவிட 137 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணி டிரா செய்யப் போராடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக இங்கிலாந்து வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்தனர். தென்னாபிரிக்க வீரர் ஸ்டெயின் அபாரமாகப் பந்துவீசி இங்கிலாந்துக்கு நெருக்கடி அளித்தார்.

ஓரளவுக்கு சிறப்பாக ஆடிய பெல் 55 ஓட்டங்களில் வீழ்ந்தார். அத்துடன் இங்கிலாந்து



அணியினரின் நம்பிக்கையும் தகர்ந்தது. இறுதியில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 240 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் தென்னாபிரிக்க அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க வீரர் ஸ்டெயின் சிறப்பாகப் பந்துவீசி 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 311 ஓட்டங் குவித்த தென்னாபிரிக்க வீரர் அம்லா ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணி தற்போது 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கிடையேயான இரண்டாவது போட்டி ஓகஸ்ட் 2ஆம் திகதி லீட்ஸ் மைதானத்தில் தொடங்குகிறது.


# இலங்கை-இந்தியா மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று



இலங்கை-இந்திய அணிகள் மோதும் இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டி இன்று பிற்கல் 2.30 மணிக்கு அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரேஒரு இருபது-20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை வந்துள்ளது.

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஒரு



நாள் போட்டியில் இந்திய அணி 21 ஓட்டங்களால் போராடி வெற்றிபெற்றிருந்தது.

அப் போட்டியில் இந்திய அணி சார்பில் விராட் ஹோலியும் இலங்கை அணி சார்பில் உலகின் முதல் நிலை வீரர் குமார் சங்கக்காரவும் சதமடித்து கலக்கியிருந்தனர்.

முதல் போட்டியில் வெற்றிபெற்ற உற்சாகத்தில் இந்திய அணியும் தோற்ற போட்டிக்காக புதிலடி கொடுக்க இலங்கை அணியும் தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல் போட்டியில் காயமுற்ற நுவான் குலசேகர நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக நுவான் பிரதீப் இப் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# மீண்டும் டெஸ்ட் அணியில் கெய்ல்



நியூசிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையே நாளை தொடங்க உள்ள முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் 13 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் ஒன்றரை ஆண்டுகால இடைவெளிக்குப் பின்பு மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் வாரியத்துடன் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக கெய்ல் கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் அணியில் சேர்க்கப்படவில்லை.

அதன் பின்னர் சமீபத்தில் இருபது-20 மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் சேர்க்கப்பட்ட கெய்ல் தற்போது டெஸ்ட் அணியிலும் இடம்பெற்றுள்ளார். காயம் காரணமாக இங்கிலாந்துக்கெதிரான கடைசி டெஸ்டில் ஆடாத சந்தர்போலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இடம்பெற்றுள்ளார்.

ஆனால் அதே தொடரில் காயமடைந்த டேரன் பிராவோ நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் விளையாடும் அணியில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மேற்கிந்தியத்தீவுகள் அணி விபரம்,**

டரன் சமி (அணித்தலைவர்), கிறிஸ் கெயில், அட்ரியன் பரத், கெய்ரன் பவல், ஆசாத் புதாடின், சந்தர்போல், மார்லன் சாமுவேலஸ், நார்சிங் டியோநரைன், டினேஷ் ராம்டின், டினோ பெஸ்ட், கெமார் ரோச், ரவி ராம்போல், சுனில் நரைன்.

## முன்னேறியது பங்களாதேஷ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) இருபது-20 கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசைப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட அயர்லாந்து அணிக்கெதிரான தொடரில் பங்களாதேஷ் வென்றதையடுத்து தரப்படுத்தலில் அவ் அணி 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

(மன்னார்)

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் 23 பேரையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் நேற்று உத்தரவிட்டார்.

இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்ட மேற்படி மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்ட நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டபோதே நீதவான் மேற்கண்ட உத் தரவினைப் பிறப்பித்தார்.

அத்துடன் குறித்த மீனவர்களை எதிர் வரும் 6-ம் திகதி மீண்டும் மன்றில் ஆஜர் படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

நீதவானின் உத்தரவை அடுத்து குறித்த மீனவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (எ-11)

# தவணைப்பணம் கட்டவென சங்கிலியை அபகரித்த இளைஞன்

(மிருசுவில்)

வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட் டார் சைக்கிளில் சென்று அபகரித்த இளை ஞன் ஒருவரை நேற்றுக் காலை 7.30 மணி யளவில் கொடிகாமம் பொலிஸார் கைது செய் தனர்.

நேற்று முன்தினமிரவு 7.30 மணியள வில் மிருசுவில் சந்தி அருகே இத்திருட்டுச் சம் பவம் இடம்பெற்றது.

மிருசுவில் நாவற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞனே மேற்படி சம் பவத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள் ளார்.

மோட்டார் சைக்கிள் தவணைக் கொடுப் பனவு கட்டுவதற்காக மேற்படி திருட்டுச் சம்ப வீத்தில் தாம் ஈடுபட்டதாக அவ் இளைஞன் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மிருசுவில் ஆட்டோ உரிமையாளரின் உதவியுடனே மேற்படி சந்தேக நபரை தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-85)

# தீர்வு கிடைக்காவிட்டால் பாரிய அழிவு ஏற்படும் -அஸ்கிரிய மகாநாயக்கர்

(கொழும்பு)

தம்புள்ளை புனித பூமி பிரச்சினைக்கு அடுத்த இரண்டு மாதங்களில் தீர்வு கிடைக்கா விட்டால் பாரிய அழிவுகள் ஏற்படும் என அஸ் கிரிய மாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரக் கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற் காக சகல தரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினேன். ஆறு மாதங்களில் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக தெரிவிக்கப் பட்ட போதிலும் இதுவரை தீர்வுகாணப்படா தது கவலைக்குரியது.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல், பிரச் சனை உக்கிரமடைந்தால், அந்த தம்புள்ளை பிரதேசத்திற்கு செல்லப்போவதில்லை என மாநாயக்க தேரர் கூறியுள்ளார்.

தம்புள்ளை பிரச்சினையை மையப் படு த்தி, கலவரங்கள் எதுவும் ஏற்பட்டால், அதற் காகன முழுப் பொறுப்பையும் புத்த சாசன அமைச்சு ஏற்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தசாசன அமைச்சின் புதிய செயலாள ராக பொறுப்பேற்றுக்கொண்ட கே.பி.திஸா நாயக்க, அஸ்கிரிய மாநாயக்க தேரரை சந் தித்து ஆசிபெற்றபோதே அவர் இதனை கூறியுள்ளார். (எ-11)

# மதுபானம் வாங்கிய நடத்துநரை விரட்டியடித்த பொதுமக்கள்

சாவகச்சேரியில் உள்ள மதுபான நிலை யம் ஒன்றில் மதுபானம் கொள்வனவு செய்த யாழ்-கொழும்பு பிரயாணத்தில் ஈடுபடும் சொகுசு பஸ் நடத்துநர் ஒருவர் அப் பகுதி மக்களால் விரட்டியடிக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மதுபானத்தைக் கொள்வனவு செய்த நடத்துநர் அதனை பஸ்ஸிற்குள் கொண்டு செல்ல முற்பட்டபோது அதனை கண்ணுற்ற வீதியில் நின்ற பொதுமக்கள் நடத்துநரை உள்ளே செல்லவிடாது விரட்டி அடித்தனர்.

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் சாரதிகள் மதுபோதையில் செல்வதாலேயே விபத்துக்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியே பொதுமக்கள் நடத்துநரை விரட்டி அடித்து ள்ளனர். (எ-11;246)

# அதிபர்களின் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட அதிபர்களுக்கும் தரவு நிரற்படுத்தும் பொறுப்பாசிரியர்களுக்கும் நாளை 25ம் திகதி நடைபெறவிருந்த கூட்டம் நடைபெறாது எனவும், அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறும் எனவும் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப் பாளர் எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ந)

## மருத்துவர்கள்...

எனவே இப் பணிப்புறக்கணிப்பை கருத் தில் கொண்டு வெளிநோயாளர்கள் தமது போக்குவரத்து அலைச்சலை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இப் பணிப்புறக்கணிப்பானது இன்று வட மாகாணம் முழுவதும் இடம்பெறவுள்ள தாகவும் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப் பணிப்புறக்கணிப்பினால் நோயா ளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நாம் வருத்தமடைகிறோம். வைத்தியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமல் எம்மால் பிறருக்கு சிறந்த சேவையை வழங்கமுடியாது.

அந்த வகையில் வைத்திய நிபுணர் ஜெயக்குமரன் வீடு தாக்கப்பட்டமை, மருத்து வர் சங்கத் தலைவர் வைத்தியர் நிமலன் தொலைபேசி மிரட்டலுக்கு உள்ளாக்கப்பட் டமை, வைத்தியசாலையில் இடம்பெறும் ஊழல்களுக்கு உரிய, நடவடிக்கைகள் எடுக்காமை போன்றவற்றை காரணம் காட் டியே மேற்படி பணிப் புறக்கணிப்புப் போரா ட்டம் இடம்பெறவுள்ளது என மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-4)

## நிமலரூபனின்...

மகர சிறைக்கும் மாற்றப்பட்டிருந்த நிலை யில் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் சடலத்தை வவுனியாவில் அடக்கம் செய்வதற்கு உச்சநீதிமன்றம் அனு மதி அளித்திருந்தது.

இந்நிலையில் நிமலரூபனின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளது. (எ-11)

## 17 ஆயிரம் பேர்...

இத்தொகையினர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

நீதிமன்றங்களினால் பிறப்பிக்கப்பட்ட 21ஆயிரத்து 798 பிடியாணை உத்தரவுகளு க்கு இணங்க மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச் சாளர் மேலும் கூறினார். (எ-11)

## யுத்தத்தின் பின் வடக்கு...

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்;

பயங்கரவாதம் முடிபுக்கு கொண்டு வரப் பட்டு தற்போது நாட்டில் அமைதியான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் முடிபுக்கு கொண்டு வரப் பட்ட பின்னர் நாட்டிலுள்ள பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பாதுகாப்புத் தரப்பின ரைத் தவிர்த்த, பல்வேறு ஆயுதக் குழுக்கள் இருந்தன. எனினும் அவை அனைத்தும் தற்போது களையப்பட்டுள்ளன.

பாதாளக் குழு செயற்பாடுகளை ஒடுக்கு வதற்கு மேலதிகமாக வேறுபல குற்றச்செயல் களை ஒடுக்குவதற்கும் பாரிய செயல்திட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஊடக அறிக்கையிடலில் நல்ல பக்கத்தை யும் காண முடிகின்றது.

பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து சுதந்திர மாக நடமாடி வரு வதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் அவர்க ளைக் கைது செய்வ தற்கு அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து வெளிநாட் டுத் தூதுவர் ஒருவர் இராணுவத்தைக் குற்றம் சுமத்தினார்.

இதற்கும் ஊட கங்களின் அறிக்கை யிடலின் ஊடாக அறிந்து கொண்ட தாக கூறினார்.

எனினும் இது குறித்து விசாரணை நடத்தியபோது அந்த மோசடிகளுடன் பாதுகாப்புத் தரப் பினருக்கு எவ்வித தொடர்பும் இல்லை யெனத் தெரிய வந்தது.

அவை அந்த சமூகக் கட்டமைப்புக்குள்ளே இடம்பெற்றவை என அறியக்கிடைத்தது.

பிழையான அறிக்கையிடலின் மூலம் சமூகத்திலும் சர்வதேசத்திலும் நாடு குறி[illegible] பிழையான தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இது நாட்டின் அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அனைத்து குற்றச் செயல்களையும் பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியுமா என்ற கேள்வி இருக்கிறது.

இதன் அடிப்படையில் ஊடகங்கள், மதத் தலைவர்கள், கல்வியாளர்கள், பெரியவர்கள், கிராமத்தில் உள்ள முக்கிய தரப்பினர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புடன் சமூகத்தில் சிறந்த கட்டமைப்பைக் கட்டியெழுப்பி இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டினார். (ந-11)

## நல்லிணக்கத்தை...

பொலிஸார் அனுமதிக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் கிளிநொச்சி மாவ ட்ட அமைப்பாளர் இராஜேந்திரம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக தோழமையின் நாள் என்ற தலை ப்பில் ஆரம்பமான இந்த ஊர்வலம் யாழ்ப் பாணம் - கண்டி பிரதான வீதியில் மாவட்ட செயலகம், பொலிஸ் தலைமையகம், பொது மைதானம் ஆகியவற்றைக் கடந்து கரடிப் போக்குச் சந்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பொலிஸார் தடை விதி த்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, பொலிஸில் முறைப்படி யான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாததால் ஊர்வலம் நடத்துவதை தம்மால் அனு மதிக்க முடியாது என கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வம் தெரிவித்தார்.

இந்த ஊர்வலத்தை வவுனியாவில் நேற்று நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

அங்கு நிமலரூ பனின் உடல் அடக்கம் செய்வதையொட்டி ஊர்வலங்கள் மற் றும் போராட்டங்க ளுக்கான அனுமதி மறுக்கப்பட்டதால், கிளிநொச்சிக்கு மாற் றிக் கொண்டதாகவும் ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

கிளிநொச்சியில் இன்று ஊர்வலம் நடத் துவதற்கு ஏற்கெ னவே தீர்மானிக்கப் பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித் தனர். (எ-11)

UK, Australia, Canada USA and Malaysia
பல்கலைக்கழக அனுமதி & தொழில்வாய்ப்புகள்
சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA
UNIVERSITY OF BRADFORD MAKING KNOWLEDGE WORK
University of Hertfordshire UH
INTI INTERNATIONAL UNIVERSITY LAUREATE INTERNATIONAL UNIVERSITIES
BlueMountains
SEGi University College
இல. 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 300 80 60 0773 616 798

**தேவை**

கணினி ரைப்செற்றிங் செய்வதில் நல்ல அனுபவம், திறமை உள்ளவர் கள் தேவை. திறமைக்கேற்ப கூடிய சம்பளம் வழங்கப்படும். (யாழ். நகரம்)

0772174751 (080)

**Advanced Microsoft Excel**

அலுவலகங்களில் Microsoft Excel பாவிக்கும் பாவனையாளர்கள் உங்கள் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ள Excelஇல் உள்ள சில இலகுவான முறைகளைத் தெரிந்து கொண்டால் (Pivot table, VBA, What if analysis, Finance&Statistic Functions etc) உங்கள் நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும்.

உயர்தரப் படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்புக் காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பாக அமையும். உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

கோ.ஜனகன், தொ.பே.: 0776169470 (C-598)

**பணிப்பெண் தேவை**

2 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு சமையல் வேலை உட்பட சகல வீட்டுப் பணிகளையும் செய்கின்ற நற்பண்புள்ள 36 வயதிற்குட்பட்ட பணிப் பெண் உடன் தேவை.

தொடர்பு: 021 222 8125 (079)

**பதவி வெற்றிடம்**

IT Product Sales Executive (Male/Female)
Full / Part Time
Abans (Pvt)Ltd
321,A Main Street,Point Pedro.
Office: 0212262456
Manager: 0752896498, 0777392252 (077)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org